
உ

சக்தி துணை





யாழ்ப்பாணம் புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்

நாரந்தனை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி இராமலிங்கம் யோகாம்பிகை

அவர்களின் நினைவாக

# யோகமலர்

04.01.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சக்தி துணை



## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

தாதாவைப் போலத் தண்ணளி கொடுப்பவள்
வேதாகமத்தின் மெய் ஞான மெய்ப்பொருள்
ஆதாரசக்தி அரிய மனோன்மணி
மாதாவுன் பாதம் வைத்தேனென் சென்னியில்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த

**காலம் சென்றவர்களான**

திரு. திருமதி. ஆறுமுகம் நாகாத்தைப்பிள்ளை

*தம்பதிகளின் பாசமகளும்*

*ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த*

*காலம் சென்றவர்களான*

திரு. திருமதி. சுந்தரம்பிள்ளை இராசம்மா

*தம்பதிகளின் மூத்த மருமகளும்*

*ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த*

**திரு. சுந்தரம்பிள்ளை இராமலிங்கம்**

அவர்களின் பாசமிகு மனைவியுமாகிய

**அமரர்**

# திரு. இராமலிங்கம் யோகாம்பிகை

**அவர்கள்**

05.12.2017 இல் அமரத்துவம்
எய்தியமை குறித்த

# நினைவு மலர்

**04-01-2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கு தந்தை அன்புக்கு அன்னை

# சமர்ப்பணம்

" சித்த மிக செவ்வையுற சீர் நெறியில் நின்று
சேர்ந்தவர்கள் நன்மை பெற
சிறப்புறவே ஈந்து
உளமார இன் மொழிகள் பேசி
ஒன்றி மனம் தன் கடமை
ஒழுங்காக ஆற்றி
வைத்த வரம் வழுவாது
வையகத்து என்றும்
வண்மையுற வளம் பெருக வாழ்ந்த
பெரும் செம்மல்
நித்தமும் செஞ்சகத்தே நீங்காது வாழும்
நின்னடிக்கே "யோக மலர்" நிறைந்த
சமர்ப்பணமே"



**இங்ஙனம்**
**கணவர்**
**மகன்**
**மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி

துணை



# அமரர்
# திருமதி இராமலிங்கம் யோகாம்பிகை
## அவர்கள்

உதயம்
28.11.1939

அஸ்தமனம்
05.12.2017

### திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி கார்த்திகை பதினெட்டில்
பூண்ட அபர பக்க துதியையில் - நீண்ட
புகழ் யோகாம்பிகை தேவிபதம் நாடிப்
போந்தார் புவியகன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருமுறைத் தோத்திரப் பாக்கள்
# பஞ்ச புராணம்
## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் - தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற்பணை முலை மடந்தை
பாதியே பரனே பால் கொள் வெண்ணீற்றாய்
பங்கயித்தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையின்
நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே அடியேனாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீ ழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

பாதிமதிநிதி போது மணிசடை
நாதரருளிய - குமரேசா
பாகு கனிமொழி காகமுற அருற்
மாயனரி திரு - மருகோனே
காலனெனையணுகாமலுனதிரு
காலில் வழிபட - அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு - சிறைமீளா
ஆடு மயிலினிலேறி யமரர்கள்
சூழவரவரு - மிளையோனே
சூரனுடலற வாரிசுவறிட
வேலை விடவல - பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிராத்தனை

தான்தோன்றி ஶ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய நிர்வாக சபைச் செயலாளரும், ஆலய தொண்டரும், சமூக சேவகரும், நாரந்தனை வடக்கில் வசிப்பவருமாகிய திரு. இராம லிங்கம் அவர்களின் மனைவியார் திருமதி. யோகாம்பிகை அவர்கள் இறைவனடி சேர்ந்ததைக் கேள்வியுற்று அதிர்ச்சி அடைந்தோம்.

இவர் மிக்க ஆன்மீன நாட்டம் கொண்டவரும் பண்பாளரும். திருமுறை பாராயணம் செய்வதில் சிறந்தவரும் அனைவரிடமும் அன்பு கொண்டவரும், நல்ல குடும்ப சூழ் நிலையில் வாழ்ந்து, சிறந்த புத்திரனைப் பெற்று, மருமகள் பேரப்பிள்ளைகளைக் கண்டு, சிறப்பாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிராத்திக்கின்றோம்.

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி
ஆலய ஆரம்ப கால பூசகரும்
ஆலய பிரதம குருவும்
**இ. ஸ்ரீதரக்குருக்கள் குடும்பம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரதிஷ்டா கலாநிதி", "பிரதிஷ்டா சிரோண்மணி"

ஓய்வு நிலை கட்டிடத் தொழில் போதனாசிரியர் அகில இலங்கை சமாதான நீதவான்

பிரதம குரு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் - நாரந்தனை ஆதீன குரு. ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலயம் யாழ் / கொழும்புத்துறை கிழக்கு

# சிவஸ்ரீ நவரத்தின பிரபு தேவக் குருக்கள்

(I.A.B.lOND)

## வழங்கிய அனுதாப ஆசிச்செய்தி

நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய செயலாளர் திரு. இராமலிங்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. யோகாம்பிகை அம்மா அவர்கள் அமரராகி விட்டார். கடந்த ஆவணி மாத சுவாதியன்று தான்தோன்றி அம்பாளின் குடமுழுக்கன்று ஆலயத்திற்கு வந்து அம்பாளின் பெருஞ்சாந்தி நீரிலே தோய்ந்த பின் தன்னிலை பற்றிக் கூறினார். தாயாரிடம் வேண்டினார். அடியேனும் ஆறுதல் வார்த்தை கூறினேன். நான் யாருக்கும் கரைச்சல் கொடுக்க மாட்டேன். ஆனால் வெகு விரைவில் போவேன் என்று கூறினார். அப்படிக் கூறாதீர்கள். இன்னும் பல காலம் நீங்கள் வாழ வேண்டும் என்று பல ஆறுதல் வார்த்தைகள் கூறிவிட்டேன்.

திருமதி யோகாம்பிகை அவர்கள் புராண அறிவு பெற்று சமய வாழ்வு வாழ்ந்தவர். அறிவு - அடக்கம் அருள் - ஆசாரம் - விருந்தோம்பல் ஆகிய அருங்குணங்கள் நிரம்பப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் அவரின் சரியா - கிரியா தொண்டுகளை கண்டறியாதவர் யாரும் இல்லை. கடந்த 05.12.2017 அன்று காலை 6.00 மணியளவில் திரு. சிவகாந்தன் அவர்கள் இவருடைய துக்க செய்தியை அறியத்தந்த தும் அடியேன் ஒருகணம் திகைப்புற்றேன். இருந்தாலும் இப்பூமி யில் பிறந்தவர் அனைவரும் என்றோ ஒரு நாள் இறைவனடி செல்வதே நியதி என்பதற்கு இணங்க திருமதி யோகம்மா அவர்களும் தான்தோன்றித் தாயாரின் பாதகமலம் நோக்கி சென்று விட்டார். இருப்பவர்கள் இதை எண்ணி வருந்தல் வேண்டாம். இறையுடன் கலந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், அன்னாரின் பிரிவால் துயருறும் கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் அனைவரும் அமைதி பெறவும் ஆறுதல் பெறவும் எல்லாம்வல்ல தான்தோன்றித்தாயாரை இறைஞ்சி வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவாகம சிரோன்மணி

# சிவஸ்ரீ க. குகதாசக் குருக்களின்

# ஆணம நலவுரை

எமது குலதெய்வமான புங்குடுதீவு தல்லையப்பற்று முருக வேலினுடை அருமைச் செல்வமான யோகாம்பிகையின் பிரிவுத் துயர் அறிந்து வேதனையுற்றேன். எம் ஆலய உரித்தாளரான திருமதி ஆறுமுகம் நாகாத்தைப்பிள்ளையின் தவச்செல்வி ''பண்புடையார் மாட்டுப்பட்டு உண்டு உலகு'' என்ற தமிழ்மறை உண்மைக்கு உதாரணமாக வாழ்ந்தவர். வடபுலத்தில் மேட்டுக்குடி மராபினராக, பெரியபுலத்தார் என்ற மகுடத்துடன் (மானிப்பாயின் பெயர் முன்பு பெரியபுலம்) பல நூற்றாண்டாய் முதலிகளாகவும் மணியகாரர்களாகவும் இவர் மூதாதையர் நிர்வாகம் புரிந்ததுடன் வடபுல பாடநூல்களைக் கற்றும் யாழ். பல்கலைக்கழகத்தினதும் ஊற்றாய் விளங்கிய இலங்கையின் முதல்குடிமகன் சேர். துரைச் சுவாமியின் இரத்த உறவினர் தல்லைப்பற்று என்பது அவர்களது நிர்வாக அலகாகும்.

அப்பிரிவில் கல்வி கற்றவர்களில் சிறப்புற்று விளங்கிய சான்றோர் குடும்பம். இவர் கருமைய இல்லம். எல்லோருமே குருவாக ஆசிரியைகளாகி மருத்துவத் தனித் தம்பியை உரித் துடையதாக வாழ்கின்றது. இவர் குடும்பம், நிர்வாகம், கல்விப் பணி, சமூகப்பணி, சமயப்பணி, தர்மசத்திரங்கள் என்பவற்றை இன்றும் நிலைக்களங்களாகக் கொண்டு இருப்பதும் மானிட நேயப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளுடன் உள்ளது. எம் ஆலயக் குடமுழுக்கு கண்டவர்களும் இவர்களே.

இப்படியாக உள்ளத்தால் பொய்யாது ஒழுகும் ஒருமையப் பதிவினையும் நடைமுறை வாழ்க்கையையும் கொண்ட தேவார பாராயணத்தை அனுதினம் பாடியவர்கள். ஜீவாத்துமா நிச்சயம் வான் மேல் உலகின் (பிரமத்துடன்) வாழும் பிரிவு பிறந்த அன்றே அறிந்த வென்பது. அவர் ஆன்மாவானது மண்டல விடிவெள்ளி யாகி ஒளிர இறையருளை வேண்டியமைகிறேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

**சிவஸ்ரீ க. குகதாசக் குருக்கள்**
ஆலய பிரதமகுரு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, නල්ලූර්
பிரதேச செயலகம், நல்லூர்
**Divisional Secretariat, Nallur**

පොදු දුරකථන / ෆැක්ස් අංකය
பொதுத் தொலைபேசி/தொலைநகல் இல.
General Telephone/Fax No: 021 222 2208

ප්‍රාදේශීය ලේකම් / பிரதேச செயலர் / Divisional Secretary — Tel: 021 222 9801, e-mail: dsænallur.ds.gov.lk
සහකාර ප්‍රාදේශීය ලේකම් / உதவி பிரதேச செயலர் / Asst. Divisional Secretary — Tel: 021 221 7215, e-mail: ads@nallur.ds.gov.lk
ගණකාධිකාරී / கணக்காளர் / Accountant — Tel: 021 222 1057, Fax: 021 222 1057, e-mail: acc@nallur.ds.gov.lk
සහකාර අධ්‍යක්ෂ - සැලසුම් / உதவி திட்டமிடல் பணிப்பாளர் / Asst. Director of Planning — Tel: 021 222 9962, Fax: 021 222 9962, e-mail: adplan@nallur.ds.gov.lk
පරිපාලන නිලධාරී / நிர்வாக உத்தியோகத்தர் / Administration Officer — Tel: 021 205 4064
දිවිනැගුම කළමණාකරු / வாழ்வெழுச்சி முகாமையாளர் / Divineguma Manager — Tel: 021 222 1058

මගේ අංකය / எனது இல. / My No:
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date: 03.01.2018

# முன்னை நாள் பிரதேச செயலாளர் அவர்களின் இரங்கல் செய்தி

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் நாரந்தனை எனும் வளம் மிக்க விவசாய கிராமத்தை பூர்வீகமாக கொண்ட திருமதி யோகாம்பிகை இராமலிங்கம் அவர்கள் பெண்ணினத்துக்கு பெருமை சேர்க்கும் சமூகசேவகியாக திகழ்ந்தவர்.இவரின் துணைவர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகத்திகழ்ந்தமையால் அவரின் துணையுடன் வறுமைக்கோட்டுக் கீழுள்ள அப்பகுதி வாழ் மக்களுக்குத் தேவையான சகல அடிப்படை உதவிகளையும் சங்கத்தின் ஊடாக பெற்றுக் கொடுத்த நல்உள்ளங்கொண்ட அம்மையார் ஆவார்.எமது பிரிவில் நடைபெறும் சமய சமூக பணிகளுக்கு முன்னின்று உழைத்தவர்.நான் பிரதேச செயலராக இருந்த காலத்தில் அமரரது தன்னலமற்ற சேவையினை கண்ணுற்றிருந்தேன். அன்னாரது அமரத்துவம் நாரந்தனை மக்களுக்கு பேரிழப்பாகும்.

யோகாம்பிகை அம்மாவின் ஆன்மா சாந்தி பெற பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன்

எ.அன்ரன் யோகநாயகம்
பிரதேச செயலாளர்

எ.அன்ரன் யோகநாயகம்
பிரதேச செயலாளர்
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி [ஓய்வு] அவர்களின் இரங்கலுரை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை புகுந்த இடமாகவும் கொண்டு இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து விண்ணுலகெய்திய அமரர் யோகாம்பிகை இராமலிங்கம் அவர்களின் ஆத்மா இறைவனடி சென்று சாந்தி பெற வேண்டுகின்றேன்.

கல்வி கேள்விகளில் முன்னோடியாக இருந்த பரம்பரையில் உதித்து வள்ளுவர் காட்டிய வழியில் வாழ்ந்து ஏனையவர்களின் கல்வி முன்னேற்றம், ஆலயத் திருப்பணி என்பவற்றைத் தன் வாழ்நாளில் நடாத்தியவர் இறைவனடி சென்று விட்டார்.

அவரது இழப்பால் தவிக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா வீடு பேற்றை அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**ஜோய் மகிழ் மகாதேவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்

# திருமதி இராமலிங்கம் யோகாம்பிகை

அவர்களின்

# வாழ்க்கை மடல்

திருமதி யோகாம்பிகை அவர்கள் சாந்தமே உருவானவர். புன்னகை தவழும் திருமுகமும், அன்பு தவழும் வார்த்தைகளும் அவருக்கே உரித்தானவை. அனைவரையும் அன்புடன் வரவேற்று, உரையாடும் பண்பு மிக்கவர். எவர் மனமும் நோகாத வண்ணம் நடந்து கொண்டவர். அபிராமி அந்தாதி பாடல்கள் முழுவதும் பாடி தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளை எந்நாளும் துதிக்க மறவாதவர்.

எவருமே எதிர்பாராத வகையில் அவரது ஆன்மா இறையடி சேர்ந்தமையே அவரது தூய சிந்தனையின் சிறப்பினைத் துலக்குகின்றது.

ஈழவள நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரின் தென்மேற்கே உள்ள புங்குடுதீவின் கிழக்குப் பகுதியில் 12ம் வட்டாரத்தில் உயர்குடி மரபில் வந்த அமரர்கள் திரு. ஆறுமுகம் திருமதி நாகாத்தப்பிள்ளை ஆகியவர்கள் இனிதாய் இல்லறம் நடாத்தி வந்தவர்கள். அவர்களின் இல்லற வாழ்வில் உதித்த செல்வங்கள் ஆறு. அவர்களில் ஐந்து பெண்களுக்கு நடுநிலைப் பெண்ணாக அமரர் திருமதி யோகாம்பிகை அவர்கள் 1939ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி மண்ணில் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி புவனேஸ்வரி, திருமதி கமலாம்பிகை ஆகியோர் அமரரின் மூத்தவர்களாகவும் திருமதி பாக்கியலட்சுமி, திரு. பேரின்பநாதன், திருமதி இராஜராஜேஸ்வரி ஆகியோர் அமரரின் இளையவர்களாகவும் உதித்தனர்.

புங்குடுதீவு கணேச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்க ஆரம்பித்தார். தொடர்ந்து அப்பாடசாலையிலேயே மேல் வகுப்புக்களையும் படித்து 1957ம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்தார். அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. ஆனால் தாய் தந்தையர் விடவில்லை. அதன் காரணமாக வீட்டிலேயே அவர்களுடன் இருந்துவிட்டார்.

இவர் தனது ஆரம்ப காலத்தில் வீட்டு நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். அத்துடன் மூத்த சகோதரிகளின் பிள்ளைகளையும் கவனிக்க வேண்டியதாயிற்று. அமரரின் தம்பியார் பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கச் சென்றதால் தாய், தந்தையாருடன் தம்பியாருக்கு உதவியாக அங்கு போய் இருந்தார்கள்.

அக்காலப்பகுதியில் அமரருக்கு திருமணம் பேசப்பட்டது. அதன் பலனாக நாரந்தனையைச் சேர்ந்த அமரர்களான திரு. இ. சுந்தரம்பிள்ளை, திருமதி இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வன் திரு. இராமலிங்கம் அவர்களுக்கு திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரந்தனையில் சைவ வேளாளர் மரபில் வந்த அமரர் களான திரு. ஆறுமுகம் இராமலிங்கம் + தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனாகப் பிறந்தார். அமரர் திரு. இ. சுந்தரம்பிள்ளை. இவர் அக்குரஸ பிரபல வர்த்தகராவார். இவர் யோகர் சுவாமிகளின் அறிவுரைகளுக்கேற்ப நடப்பவராவார்.

நாரந்தனையில் சைவ வேளாளர் மரபில் வந்த அமரர் களான திரு. சரவணமுத்து + அன்னப்பிள்ளை தம்பதிகளுக்கு தெய்வானைப்பிள்ளை, பேரம்பலம், இராசம்மா, உலகநாதபிள்ளை, சரஸ்வதியம்மா, திலகவதியம்மா, விமலாதேவி ஆகியோர் எழுவர் ஆவார்.

இவர்களில் இராசம்மா என்பவரை சுந்தரம்பிள்ளை அவர்கள் விவாகம் செய்தார். இவர்களுக்கு மூத்த மகனாக இராமலிங்கம் அவர்கள் அவதரித்தார். அவரின் பின் உருத்திர மூர்த்தி, மகேஸ்வரி என மூவரும் தெய்வானைப்பிள்ளை அவர் களுக்கு நால்வரும் பிறந்தார்கள். மூத்தவராக சிவநாதன், தற்பராதேவி, யோகநாதன், லோகேஸ்வரி ஆவார். இவர்களில் மூத்தவராகிய இராமலிங்கம் அவர்கள் ''சிங்கர் ஸ்ரீ லங்கா'' கம்பனியில் விற்பனை முகவராகச் சேர்ந்து செயற்பட்டார்.

இராமலிங்கம் அவர்கள் நாட்டுப்பற்று உள்ளவர். கிராமத்தின் வளர்ச்சிக்காக பாடுபடுபவர். தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் வளர்ச்சியிலும் முக்கியமானவர். அம்பிகை தோன்றிய காலம் முதல் அம்பிகையின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித் தவர் ஆலய சபை (சைவ மகா சபை)யில் நிர்வாக உறுப்பின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக இருந்து பொருளாளராக பலமுறை இருந்தார். செயலாளராக பலமுறை இருந்தார். தற்பொழுது அவர் செயலாளராக இருந்து வருகின்றார். அத்துடன் கிராமத்தில் உள்ள மற்றைய அமைப்புக் களிலும், தலைவராக, செயலாளராக, நிர்வாக உறுப்பினராக இருக்கின்றார். மக்களின் நன் மதிப்பைப் பெற்றவர்.

தனது தந்தையார் 1962ம் ஆண்டு காலமாக வீட்டுப் பொறுப்புக்களை தான் ஏற்று நல்ல முறையில் நடைமுறைப்படுத்தி வந்தார். எல்லோரும் போற்றக்கூடிய முறையில் வாழ்ந்து வந்தார்கள்.

இராமலிங்கம் அவர்கள் யோகாம்பிகை அவர்களை 1972ம் ஆண்டு தை மாதம் 26ம் திகதி கலியாணப்பதிவு செய்து 1972ம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி திருமணம் செய்தார். இவர்களுக்கு ஓர் ஆண் மகன் பிறந்தார். அவருக்கு சுரேஸ்கரன் எனப் பெயர் வைத்தார்கள். அவரை நல்ல பிள்ளையாக வளர்த்து படிப்பித்தார் கள். நாட்டு நிலைமை காரணமாக பிள்ளையை உறவினர்களுடன் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார்கள். இரண்டு வருடத்தின் பின் மகனைக் கொழும்புக்குக் கூப்பிட்டு, சுவிஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் அங்கு சென்று நல்ல வேலையில் சேர்ந்து தாய், தகப்பனை நன்கு கவனித்தார். மகனுக்கு அலுத்துமாவத்தை யில் வசித்து வந்த செல்வராசா அவர்களின் புத்திரி மானஷாவை திருமணம் செய்து வைத்தனர். அவர்கள் சுவிஸ் நாட்டில் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும், ஓர் ஆண் குழந்தையும் உள்ளனர். அவர்கள் சிறப்பாக கல்வி கற்று வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் யோகாம்பிகை அவர்கள் பிறந்த வீட்டில் ஊரார் மெச்சக்கூடிய முறையில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பதற்கு அமைய வீட்டு நிர்வாகத்தை யும் நல்ல முறையில் செயல்படுத்தி வந்தார். கடவுள் பக்தியுடையவர். தினமும் திருமுறைகளைப் பாடி வந்துள்ளார். திருமணம் செய்து கணவரின் ஊருக்கு வந்து பத்து வருடங்கள் ஒரே குடும்பமாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கணவரின் இனத்தவர்கள் அமரரைப் பார்த்து விட்டு இவர் வீட்டுக்கு வந்த ''மகாலட்சுமி'' எனக் குறிப்பிட்டுள்ளனர். நானும் கேள்விப்பட்டுள்ளேன்.

இவர் வீட்டுக்கு வந்த பின் இவரின் மைத்துனர்கள், மைத்துனிமார்களின் திருமணங்கள் அடுத்தடுத்து நடைபெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. அமரர் அவர்கள் கணவனுடன் தனது பேத்தியின் 1வது பிறந்த தின வைபவத்துக்கு 2004ம் ஆண்டு சுவிஸ்லாந்து போய் மூன்று மாதங்கள் நின்று வந்தார்கள். 2005ம் ஆண்டு கணவருடனும் அவரின் உறவினர்களுடனும் இந்தியாவுக்கு போய் ஒரு மாத காலம் தங்கி, எல்லாக் கோவில்களையும் தரிசித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2016ம் ஆண்டு சுவிட்சலாந்து போய் தனது பேத்தியாரின் பூப்புனித நீராட்டு விழாவில் கலந்து கொண்டார். புரட்டாதி மாதம் முதல் மார்கழி மாதம் வரை அங்கு நின்று தனது இன சனங்கள் வீடுகளெல்லாம் போய் வந்தார். அக்காலப்பகுதியில் ஜேர்மன் நாட்டிற்கும் போய் வித்தியாவுடன் பத்து நாட்களுக்கு மேல் தங்கி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் தனது கணவருடன் அன்பாக பழகி நேசித்து வந்தார். நேரம் தவறாது உணவு தயாரித்துக் கொடுத்து வந்தார். எங்கு போவதென்றாலும் கணவருடனேயே போய் வருவார்.

நாட்டில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் பல இடங்களில் போய் தங்க வேண்டி ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் தனது மாமியார், கணவனை இழந்த மைத்துனி, பிள்ளைகள், சகோதரியின் பிள்ளைகள் யாவரையும் தன்னுடன் கூட்டிச் சென்று பாதுகாத்து காப்பாற்றினார். இடம் பெயர்ந்து போய் இராமநாதபுரத்தில் இருந்த காலத்தில் 1998ம் ஆண்டு ஆனி மாதம் மாமியார் காலமாகி விட்டார். அவரின் கடமைகளை தனித்து நின்று செய்து முடித்தார். அவ்வூரிலும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

தனது உறவினர்களின் நன்மையான கொண்டாட்டங்கள் தீமையான விடயங்கள் யாவற்றிலும் முன்னின்று நடாத்தி வைத்தவர் என்பது கண்கூடு. கணவர் பொது விடயங்களில் கலந்து கொள்வது பிடிக்காவிட்டாலும் அவரின் பொழுதுபோக்குக்காக போய் வரட்டும் என விட்டுவிடுவார். அவர் செய்யும் எந்தக் காரியத்திலும் துணையாக நின்றுள்ளார். இவர் தினமும் அபிராமி அந்தாதி 100 பாட்டும் படித்து முடித்து விபூதி தரித்து படுக்கைக்குப் போவார்.

அமரர் யோகாம்பிகை அவர்கள் 1939ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி தமிழுக்கு பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் மிருகசீரிடம் நட்சத்திரமாகிய தினத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்துள்ளார். 1972ம் ஆண்டு திருமணம் செய்து ஒரு மகனுக்கு தாயாகி பல பிள்ளைகளுக்கு செவிலித்தாயாகி நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி 2017ம் ஆண்டு மார்கழி மாதம் 5ம் திகதி (ஏவிளம்பி ஆண்டு கார்த்திகை மாதம் 18ம் நாள் இரவு மிருகசீரிட நட்சத்திரத்தில்) 78வது வயதில் காலமாகி விட்டார்.

இவர் விளக்கீட்டை அடுத்த நாளிலும், விநாயகர் கதை ஆரம்ப நாளிலும், பிறந்த நட்சத்திரத்திலும் காலமானார். அமரர் யோகாம்பிகை அம்மா அம்பிகையின் பாதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனை வேண்டுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுபம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைக்குரிய யோகாம்பிகை

அன்புத் துணைவியே!

1972ம் ஆண்டு வைகாசி மாதம் 8ம் திகதியில் உங்களுக்கு தாலிகட்டி மணமாலையிட்டு என் வீட்டிற்கு அழைத்து வந்தேனே. அன்று முதல் எங்கள் வீட்டு இலட்சுமியாய், குலவிளக்காய் இருந்தீர்களே! அதை மறக்கமுடியுமா?

கொண்டவன் மனதுக்கேற்ப தொண்டுகள் பல செய்து நான் செய்யும் தவறுகள் யாவற்றையும் பொறுத்து நடந்ததை மறக்கமுடியுமா?

என் சகோதர, சகோதரிமார் பிள்ளைகள் மேல் நீங்கள் வைத்திருந்த பாசத்தை மறக்கமுடியுமா?

வன்செயல் காலத்தில் பெற்ற பிள்ளையை, நாம் எப்படிப் போனாலும் பரவாயில்லை எனது பிள்ளை தப்பி இருக்க வேண்டு மென்று பெற்ற மனதைக் கட்டுப்படுத்தி உறவினர்களுடன் இந்தியாவுக்கு அனுப்பினீர்களே! அதை எப்படிச் சொல்வது.

என் சகோதரி கணவனை இழந்தி நிலையில் சகோதரியை யும் பிள்ளைகளையும் பொறுப்பேற்றீர்களே! அதை எப்படிச் சொல்வது.

பிள்ளை அனுப்பும் பணத்தைக் கொண்டு, அதற்கேற்ப செலவு செய்து குடும்ப வண்டியை ஓட்டிச் சென்ற என் குலவிளக்கே எங்கு சென்று விட்டீர்கள்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தோமே! எங்களுடன் எவ்வளவு பேர் வந்தார்கள். அவர்களையெல்லாம் மனம் தளராது உபசரித்தீர்களே! அதை எப்படி மறப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சகோதரியின் பிள்ளைகளின் படிப்பில் எவ்வளவு கவன மெடுத்தீர்கள். அவர்களைப் பாதுகாக்க எவ்வளவு கஷ்டப் பட்டீர்கள். பிள்ளைகளின் பூப்புனித நீராட:டு விழாக்கள், திருமணங்கள் யாவற்றையும் ஒழுங்குபடுத்தி முன்நின்று நடாத்தி வைத்தீர்களே!

நாம் மீண்டும் சொந்த இடத்துக்கு வந்தபின் தான் தோன்றி அம்மன் ஆலயப் பொறுப்புக்கள், கிராம பொது விடயங்கள் யாவற்றிலும் பங்கு கொள்ள மறுப்புத் தெரிவித்து பின் எனது மன அமைதிக்காக வீட்டீர்களே! ஆலய கும்பாபிஷேகத்தின் பின் எவ்வித பொறுப்பும் எடுக்கக்கூடாது தொண்டு மட்டும் செய்து வாருங்கள் எனக் கூறினீர்களே! ஏன்? என்னை விட்டு விலகிப் போவது முதலிலேயே தெரியுமா?

அம்பிகையே!

நான் ஆலயம் தொடர்பாகவோ அல்லது வேறு விடயங்கள் தொடர்பாகவோ எழுதும் விடயங்களை சரி பிழை பார்த்து திருத்தி எழுதும்படி கூறுவீர்களே! இனி யார் செய்வது.

இடம்பெயர்ந்து இராமநாதபுரத்தில் இருக்கும் போது திடீரென அம்மா இறந்து விட்டாரே! அவவின் மற்ற பிள்ளைகள் இல்லை. உறவினர்கள் கூட கிட்ட இல்லை. அந்தச் சந்தர்ப்பத் தில் கூட தனித்து நின்று எல்லாக் கருமங்களையும் செய்து முடித்தீர்களே! அதைப் பொறுக்க முடியுமா?

நான் (1986) ஷெல்பட்டு காயப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் கிடந்தேனே. பல தினங்கள் ஆஸ்பத்திரியில் நின்று எனது சுகத்துக்காக அம்பிகையை வேண்டி அழுதீர்களே! அதை யாரிடம் சொல்லி அழ.

நான் திருமணம் செய்த நாள் முதல் தனித்து இருக்க வில்லையே! ஆனால் இவ்வாண்டு (2017) மட்டும் அம்பாளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகத்திலும் மண்டலாபிஷேகத்திலும் கலந்து கொள்ளும் பொருட்டு பகலிலே தனிமையில் விட்டுச் சென்றுள்ளேன். இதை மன்னிப்பீர்களா தாயே!

அம்மா!

தினமும் அபிராமி அந்தாதி 100 பாட்டும் பாடி படத்துக்கு விளக்கு வைப்பீர்களே! இனி யார் செய்வது.

தெய்வமே!

பூவோடும் பொட்டோடும் போக வேண்டும். பாயில் கிடக்காமல் வெந்து மனம் நோகாமல் போக வேண்டும். மற்றையவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல் போக வேண்டு மென்று கூறுவீர்களே! அப்படிப்போக ஏன் மனம் வந்தது.

78 வயதில் போவேன் என்று கூறுவீர்களே! அதேபோல் ஆங்கில திகதிப்படி 78வது பிறந்த தினத்தில் என்னைக் கொண்டு சிறு தொண்டைச் செய்வித்தீர்கள். தமிழ் திகதிப்படி பிறந்த அன்று இருந்த மிருகசீரிட நட்சத்திரத்தில் கார்த்திகை 18ம் நாள் உங்கள் உயிர்பிரிந்து அம்பிகையுடன் சேர்ந்து விட்டீர்களே!

நீங்கள் வீட்டுக்கு வருவோரை இன்முகத்தோடு வரவேற்று அன்புகாட்டி பாசமுடன் உறவாடி விடுவீர்களே! இனி யார் செய்வது.

என்னைத் தவிக்கவிட்டு ஏதும் கூறாமல் சென்று விட்டீர்களே! என் செய்வது என் மனம் தாங்காது தாயே!

அம்மாவே! நீங்கள் அம்பிகையின் பாதம் போய் சேர்ந்து விட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளை வேண்டி நிற்கின்றேன்.

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவர் இராமலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தாயுருவே யார்க்கும் தீங்கெண்ணாத் திருவிளக்கே!

உய்வித்தாய் என்னுயிரை ஒளியேற்றி
உற்றார் வாழ்வும் உயர்வித்தாய்
மெய்வித்தாய் மேதினியில் வந்துதித்த
மேன்மைத்தாய் நீயொன்றே என்றிருந்த
தெய்வத்தாயுருவே யார்க்கும் தீங்கெண்ணாத்
திறன்மிக்க திருவிளக்கே தீய்ந்தாயோ!
நெய்வற்றுஞ் சுடராகி நேற்றாகி நீ போக
நெருப்பாகி மீந்ததெந்தன் நெஞ்சமம்மா!

காத்திருந்து எனையீன்று கண்ணொற்றி
வளர்த்தெடுத்துக் காலமெலாம் அருகிருந்தாய்
சாத்திரங்கள் போற்றுமிகைச் சாந்தமே
உன்வடிவில் பார்த்திருந்து வளர்ந்தேனே
கோத்திரத்தின் பெருமை துணைக் கொண்டவளே
கொடுங்கூற்று வனுமுனையிழுத்துக் கொண்டானே
தோத்திரத்துக் குரியவளாய்ப் போனாயோ அம்மா!
துதிக்குமிரு கரமிங்கே தோன்றாயோ முன்னே!

நீயிருக்கும் வரைதானே நிழலிருக்கும் என்றிருந்த
நினைப்பாலே அப்பாவின் நிலையின்று பாராயோ
தாயிருப்பாள் என்றிருந்தே தனியாகிப் போனாரே
தஞ்சம்யா ரென்றவரின் தவிக்கும் முகம் பாராயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகனின் திருமணத்தின் போது



மணமகளின் பெற்றோருடன் - 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிட்சிலாந்து போன போது - 2004




சுவிஸ் விமான நிலையத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயிருக்கும் உடல்விட்டே நோகாமல் போவதென்றால்
ஆயிரந்தானிருந்தாலும் அம்மாவுன் போல்வருமா
ஆற்றாதே அரற்றுகிறோம் அணைத்திடவே வாராயோ?

தொட்டதெல்லாம் உன்கை துலங்கியதோர் காலமுண்டு
தோற்றிய துன்புன்னகையால் தோற்றபல கவலையுண்டு
இட்டமுடன் நீயெடுத்த எக்காரியமும் பிழைப்பதில்லை
எந்தனம்மா நீயின்றி எதுவுமிங்கு தழைப்பதில்லை
தட்டவொரு வார்த்தைநான் தவறிநீ சொன்னதில்லை
தளும்பாது புல்கூட தாயே நீ வழிநடந்தால்
படடோமே பெருமையெலாம் பாதியிலே விட்டாயே
பரிதவிக்கும் என் குடும்பம் பாசமினி யார்தருவார்?

அன்பு மகன்
**இ. சுரேஸ்கரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தை ஒரு தெய்வம்

அன்புள்ள அத்தைக்கு,


நீங்கள் எங்களை விட்டு மறைந்து விட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் என் மனது அதை ஏற்க மறுக்கிறது. நீங்கள் என்றும் வாழும் தெய்வம் எங்களுடன் என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள். எங்கள் மீது நீங்கள் காட்டிய அன்பும் பாசமும் அளவிடற்கரியன நீங்கள் கூறிய அறிவுரைகள் எங்கள் உள்ளங்களில் பசு மரத்தாணிபோற் பதிந்துள்ளன. அவை என்றும் உங்களை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

உங்களைப் பிரிந்து நேசம் மறவா நெஞ்சங்கள் எல்லாம் உருகும் போது நாமடையும் வேதனைக்கு அளவே இல்லை. மீண்டும் எப்போ உங்களைக் காண்போம் என நெஞ்சம் ஏங்குகிறது. எங்களுடன் நீங்கள் செலவிட்ட காலங்களை எண்ணிப் பார்க்கிறோம். இதோ தங்கள் உருவம் என் கண் முன் தோன்றுகிறது.

உங்கள் சீறிய நெற்றி எங்கே?<br>
சிவந்த நல் இதழ்கள் எங்கே?<br>
கூரிய விழிகள் எங்கே?<br>
குறுநகை போன எங்கே?<br>
நேரிய பார்வை எங்கே?<br>
நிமிர்ந்த நன்நடைதான் எங்கே?<br>
நிலமெலாம் வணங்குந் தோற்றம்<br>
நெருப்பினில் வீழ்ந்த திங்கே<br>
கண்டு வேதனையில் உளர்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு''

நேற்றிருந்தார் இன்று இல்லை என்னும் பெருமை உடையது இவ்வுலகு என்னும் வள்ளுவர் வாக்கு உங்களைப் பொறுத்த வரையில் நிதர்சனமாகி விட்டது. அத்தையை வந்து பார்க்க நாள் குறித்திருந்தோம். ஆனால் காலன் ஒரு நாள் முந்தி விட்டான். எங்கள் மனதைப் பேதலிக்கச் செய்து விட்டான். இன்னொரு கால் காண முடியாது. இப்படியாயிற்றே என்று எல்லோரும் இரங்கிடச் செய்து விட்டான்.

என் அருமை அத்தையே! நீங்கள் இம்மண்ணுலகில் வாழ் வாங்கு வாழ்ந்தீர்கள். எங்களுக்கு நல்வழி காட்டினீர்கள். விண்ணுலகிலும் நீங்கள் சிறப்புடன் திகழ்வீர்கள். எங்களுக்குத் தோன்றாத துணையாக நின்று வாழ்விப்பீர்கள் எனத் திடமாக நம்புகிறோம். தங்கள் ஆன்மா சாந்தி பெற இறைவனை என்றும் வேண்டுவேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்கள் அன்பு மருகி
**சு. மானஷா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம்மா! உங்களை என்று காண்போம்?


அப்பம்மா! உங்களைக் காண்பதற்கு ஆவலாக இருந்தோம். இப்படித் திடீரென மறைந்து விட்டீர்களே! எங்கள் எண்ணம் எல்லாம் மண்ணாகி விட்டதே என்று எண்ணி எண்ணி வருந்துகின்றோம். அப்பம்மாவுடன் பேசுவதென்றால் எங்களுக்கு நல்ல விருப்பம். அவரிடம் கதைகள் கேட்பதில் எங்களுக்கு மிக்க ஆசை. அப்பம்மா எங்களுடன் தங்கியிருந்த காலத்தில் அவரிடம் நாங்கள் கற்றுக் கொண்டவை ஏராளம். ஒழுங்கு, கட்டுப்பாடு, நேரந்தவறாமை, போன்ற நல்ல பல விடயங்களை அவரிடமிருந்து கற்றுக் கொண்டோம்.

எங்கள் மீது அவர் காட்டிய பரிவும், பாசமும், அன்பும், அளவிடற் கரியன. அப்பம்மாவின் பக்கத்திலிருந்து பேசும் வாய்ப்பை இழந்து விட்டோம். என் செய்வது இறைவன் அவரைத் திடீரென அழைத்துக் கொண்டான் என்றே மனம் ஆறுகிறோம். அப்பம்மாவின் ஆன்மா சாந்தி பெறப் பிராத்திக்கின்றோம்.

அன்புள்ள பேரப்பிள்ளைகள்

**சு. மிதுர்ஷா**

**சு. மிதுஷன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியா போன போது

தஞ்சை பெரும் கோவில் கும்பகோணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையோடு அன்பு செய்த ஆசையம்மாவே...

ஆசையோடு அன்பு செய்த ஆசையம்மாவே
இனி யார் வந்து அழைப்பாரோ என்னை ஆசையாக
பேர் சொல்ல நீர் பெற்றது ஒரு ஆண் பிள்ளை தான்
ஆனால் பேரன்புடன் வளர்த்தீரே பல பிள்ளைகளை
புகுந்த வீட்டினருக்கு குறையின்றி பணி செய்து உம்
பெற்ற வீட்டினரின் துயரையும் துடைத்தீரே
ஆசை ஐயா செய்த பெரும் தவமே உங்களை அருமைத்
துணையாய் பெற்றிடக் கிடைத்தது பெரும் வரமே
இல்லற வாழ்வுப் புத்தகத்தில் ஓர் இனிய பாடம்
நீங்கள் நிட்சயமாகப் படிக்கப்பட வேண்டிய அத்தியாயம்
அழகும் பொறுமையும் நிறைந்த அன்பான பெண்மணியே
வாதங்களைத் தவிர்த்து நல்வார்த்தைகளை செதுக்கிய தாயே
சேவையே வாழ்வின் வழிமுறையாக வாழ்ந்த சேவகியே
இதயத்தில் அமைதி கொண்டு விடை தருகிறேன் இனி
நீங்கள் செல்லுமிடம் ஐயனார் அடி நிழலே ஆகட்டும்
இல்லையென்றால் திரும்பி வாருங்கள் எம்மிடமே
இங்கு பிள்ளைகள் நாம் காத்திருப்போம் என்றும்
அன்பான சொந்தம் உங்களை வேண்டித் தாயே.

அன்பு பெறாமகள்
**இ. நித்யா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனக்கிறது

அன்பான திருவுருவமே அம்மா
நீங்கள் பூமியில் இருக்கும் வரை
உங்களுக்காக அழுததில்லை
நீங்கள் எங்களை விட்டு
பிரிந்தவுடன் நாங்கள் அழாமல்
இருந்ததில்லை அம்மா

பொறுமைக்கும் உவகை நீ தான் அம்மா
பொறுத்தது எல்லா போதும் என்று
வெகுதூரம் சென்றுவிட்டீர்கள் அம்மா
சிந்தை கலங்க வைத்து சிறகடித்து
பறந்தது எங்கே அம்மா

விந்தையாய் உள்ளதம்மா
உன் பிரிவு வேதனையாய் உள்ளதம்மா உன் மரணம்
மாறுமோ உங்கள் நினைவு அமைதியான பேச்சு
உங்கள் புன்சிரிப்பு மாறாத வடுவாக பதித்து விட்டு சென்றீர்கள்
அம்மா உங்கள் உடன்பிறப்பு கனடாவிலிருந்து புலம்புகிறார்
தாங்கள் வளர்ந்த விதங்களை உங்கள் தம்பியின் மனைவியும்கூட
உற்றவரை, ஏன் ஊர் வரை எல்லாம் சற்றே மனம் பதைக்க
விட்டு சென்றீர்கள் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

உங்கள் பிரிவால் துயருரும்
பெரு மகள் லதா குடும்பம்
**சின்னக்கா குடும்பம்**
கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேளாங்கன்னி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாமியாரின் கடமையின் போது (1998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனி அம்மம்மா.....

நிலவின் சிரிப்பும்
நிஜத்தின் அழகும்
காண கண்கள் ஏங்குதே
கனவாய்ப் போனதே அம்மம்மா......

நினைவுகளின் பசுமை
நினைத்தாலே இனிக்கும் கனிவு
வெல்லமாய் தித்திக்கும் உபசரிப்பு
பெயரோ.... சீனி அம்மம்மா.....

நாரந்தனை வந்து போகையில்
நித்தம் ஒரு தரிசனம்
அரவணைக்கும் பண்பும்
அடக்கமும் நீவீர் தனிச்சிறப்பு......

இயற்கை அழைக்கும் போதும்
இயல்பாய் ஏற்றுக்கொண்டீர்
இனியோர்க்கே இனியவை எட்டும்
சீனி அம்மம்மா - நீவீர் எடுத்துக்காட்டு

ஏங்கித் தவிக்கும்,
**பெறாமகள், மங்கை**
**பேரன், பேத்தி, பூட்டி**
**(ஜனகன், சிந்துஜா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தங்கை என் அம்மா

நீயில்லாத வாழ்வு எமக்கு
தனிமையிலும் தனிமை தாயே
எமக்கு தாய்மடி நீ ஆகினாய்
தாங்கும் நிலமானாய் தாயே
உன் நினைவு இல்லாத பொழுது
எங்களுக்கு வெறுமையிலும்
வெறுமை தாயே அருட் கடலே
உன் அருள் மழை பொழிய வேண்டும்
தாயே உன் திருப்பாதம் அமர்ந்து
பிரார்த்திக்கிறேன் அம்மா

இப்படிக்கு
**சின்னக்கா கமலாம்பிகை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகைக்கோர் கவி

கார்த்திகையில் பூத்தவளே
காவியமாய் வாழ்ந்தவளே
நிலவின் நிழலே
நியத்தின் உருவே
சக்தியின் சங்கமமே
சாத்திரத்தின் சமுத்திரமே
ராமரின் சீதையே
இராமலிங்கத்தின் யோகாம்பிகையே
புங்குடுதீவில் பூத்தவளே
நாரந்தனையின் நாயகியே
இன்று நீர் தெய்வமாகினீர்
அமிர்தத்தின் ஆசை மகளே
ஆறுமுகத்தின் பாசமகளே
புவனத்தின் பூங்கொடியே
கமலத்தின் கண்மணியே
பாக்கியத்தின் பாச அக்கா
நாதனின் நவரத்தினமே
குணத்தின் குலவிளக்கே
காலனின் தேவையால்
கார்த்திகையில் ஏன் மறைந்தீர்.

**விக்கியின்**

**விழுதுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அக்காவே!

இத்தரணியை விட்டு மறைந்தீரோ அக்கா
ஓயாது உன் பிரிவு எங்களை வாட்டுதக்கா
பாய்ந்தோடும் கண்ணீருக்கு அளவே இல்லை அக்கா
நித்தம் தொழுதிடும் தான்தோன்றி அம்மன்
நாமத்தை எப்படி விட்டு சென்றீரக்கா
உதயன், விஜயன், வசந்தன் என்று பாசம் சொரிந்ததை
நாளும் நினைத்து அழுகின்றோம் அக்கா
ஆறுதல் சொல்லிட அருகினில் நீங்கள் இல்லையே அக்கா
நாங்கள் உங்களைத் தேடி வந்த போது
எங்களை உபசரித்த விதம்
எங்களை விட்டு அகலாது அக்கா
நாள்தோறும் அதை நினைத்து
கவலைப்படுகின்றோம் அக்கா
விண்ணோடு இன்று கலந்திட்ட அக்காவே - எங்கள்
கண்ணில் எப்போது காட்சி தருவாய் அக்கா
உங்களோடு நாம் வாழும் காலம் என்று
வருமென தான்தோன்றி அம்மனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**உங்கள் பிரிவால் துயறுரும்**
**உடன்பிறவா சகோதரர்கள்**
**உதயன், விஜயன், வசந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கணவரின் பிறந்த நாளின் போது (2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதான அம்பிகையே

பாலகனாய் உங்கள் கைப்பிடித்து
பருத்தித்துறையூர் வரை ஒரு பயணம்
மணப் பெண்ணுடன் நாரந்தனை வரை மறு பயணம்
பல கறிகள் சோறும் நிதம் தந்து
பாராட்டி வளர்ந்திட்டீர் அம்மா என்னை.....

சீரும் சிறப்புமாய்
லிங்கத்திற்கோர் அம்பிகையாய்
ஊரார் மெய்ச்சிட
வாழ்ந்திட்டீர் அம்மா
காலங்கள் புரண்டிட
காயமது சுருங்கிட
காலனும் உன்னைக்
கவர்ந்திட்டானே அம்மா

கண்ட காட்சிகள் கனவாக
மாட்சிகள் வீணாகிப் போக
பெற்ற மகனும் பெறாமக்களும்
சுற்றி அழ - பிரிந்தீர் எமை
வந்தேன் அம்மா உன்
இறிதி ஊர்வலம் சிறப்பிக்க
வற்றாத அன்பே - சிவம் என
வாழ்ந்து மறைந்திட்டீர் அம்மா
பிறந்த நட்சத்திரத்தில்
இறந்து மோட்ச வீட்டிலிருந்து
அம்பிகையாக உன் ஆசி வேண்டும்
உன் வளர்ப்பு மகன்

**கமலநேசன் (கமல்)**
**Kamal Tarafing 8co**
**Colombo / Swss**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே!

கற்றதாய் கனிந்ததாய்
கருணையுள்ளம் கொண்டதாய்
நற்றதாய் நவின்றதாய்
நலம் வாழச் செய்த தாய்
உற்றதாய் உறைந்த தாய்
உணர்வெல்லாம் கலந்ததாய்
பெற்றதாய் மேலாய் நன்றாய்
பெறாமல் எனைப் பேணியதாய்

அன்புள்ளம் கொண்ட தாய்
அழகுறுதியில் தெய்வத்தாய்
பண்புள்ளம் சூழ்ந்ததாய்
பரிவினிலே பாசத்தாய்
துன்பங்கள் துடைத்த தாய்
இன்பங்கள் சேர்த்ததாய்
இயல்பாய் இன்சொல்லாய்
இனியவளாய் மிளிர்ந்ததாய்

கதறியதாய் அழுததாய்
கன்றைப் போல் இருக்கின்றேன்
கனவாய் தான் போகாதோ
அத்தையுன் சாவுதான்
இறந்தாய் உயிர்ப்பாய்
என் வயிற்றில் பிள்ளையாய்
எதிர்பார்ப்பாய் இருக்கின்றேன்
என் ஆசை தீர்ப்பாயா......

விஜிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்புள்ள அத்தை

அன்பு காட்டி எமையெல்லாம் அரவணைத்து, அறிவூட்டி, எமக்கெல்லாம் வழிகாட்டி, ஆலமரம் போல் எம்மையெல்லாம் அரவணைத்து, எமக்கு சோறூட்டி, ஓர் அன்னை போல் எமை வளர்த்த என் அன்பு அத்தை நீங்கள் எமக்கு அத்தையில்லை. எங்கள் அம்மா என் அம்மாவிற்கு ஓர் அன்னையாக உடன் பிறவா அக்காவாய் அண்ணியாய் இருந்து எமைத் தாங்கி வளர்த்தீர்கள் அத்தை கடைசி நேரத்தில் கூட எமைக் கூப்பிட்டீர் கள் ஆனால் நான் வரும் முன் நீங்கள் இறைவனிடம் சென்ற அவசரம் ஏன் அத்தை?

எம்மைத் தூக்கி நிறுத்தி எம் வாழ்வுக்கு பெரும் தூணாய் துணையாய் எங்கள் துயர் அனைத்தையும் உங்கள் தலையில் தாங்கி எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழ வைத்தீர்கள் அத்தை. நான் வருத்தமாக இரவில் தூங்காமல் இருக்கும் போது எனக்கு சுடு தண்ணீர் தந்து குடிக்க வைத்து உங்கள் நெஞ்சில் என்னைத் தூங்க வைத்தீர்களே அத்தை.

ஆனால் நீங்கள் கடைசியாக தூங்கும் போது நான் அருகில் இல்லையே அத்தை ஏன் அதற்குள் என்ன அவசரம் அத்தை அத்துயரம் என்னால் தாங்க முடியாது என நினைத்தீர்கள் போல் அத்தை.

அத்தை உங்களைப் போல் ஓர் பாசமிகு அத்தையை என் வாழ்நாளில் காணப் போவ தில்லை. நீங்கள் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களோடு இருந்து எமக்கு வழிகாட்டினீர்களோ அதே போல் உங்கள் வழியில் என்றும் நான் இருப்பேன் என உங்களிற்கு வாக்குறுதி அளிக்கின்றேன் அத்தை.

நீங்கள் சொல்லித் தந்த பாடம் அறிவுரைகள் எல்லாம் என்றும் உங்கள் நினைவோடு எம்முடன் அழியாது இருக்கும் நீங்கள் விண்ணுலகம் சென்று இறைவனிடம் சேர்ந்தாலும் எங்களை அங்கிருந்து வாழ்த்திக் கொண்டு தான் இருப்பீர்கள் அத்தை.

நாம் வாழும் வரை உங்கள் நினைவு உங்கள் வழிகாட்டி என்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டு தான் இருக்கும் அத்தை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றேன் அத்தை.

**என்றும் உங்கள்**
**செல்ல மருமகள், மகள்**
**வித்தியா [ஜேர்மண்]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியமான அத்தைக்காய்....

பாசமகு அத்தையே! தாயாய் நின்று தரணியில் உவகையுடன்
எமை வாழ வைத்த தெய்வமே!
வளமான என் வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்ற
என் ஆசை மிகு அத்தையே!

உங்களை போல் ஓர் தெய்வத்தை உலகினில் கண்டதில்லை.

வருடத்தில் ஓர் மாதமாம் மார்கழி
நான் பிறந்ததோ மார்கழி
என் தந்தையை இழந்தேன் மார்கழி
என் கணவனை இழந்தேன் மார்கழி

ஏன் தாயே? பொறுக்குதில்லை என் நெஞ்சம்
என் அத்தையையும் இழந்தேன் மார்கழி
நான் செய்த பாவம் தான் என்னவோ?

அத்தை அழைக்கின்றா.... என ஓடி வந்தேன் பார்ப்பதற்கு!
எமைத் தூக்கி வளர்த்த தங்களை எம் கையால் தூக்குவதற்கா!
போதும் அத்தை என்னால் முடியவில்லை.

நான் பெற்ற துயரம் கடக்க ஒரு மார்கழி கழிந்தது
அதற்குள் இன்னோர் மார்கழியா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைப் போன்ற ஓர் அத்தை உலகில் எவருண்டு
வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை அத்தை......

மனம் இன்னும் நம்பவில்லை
அத்தை! எங்கே சென்றீர்கள்?
கதி கலங்கி நிற்கின்றேன்.

என் மனதில் உங்கள் நினைவு
அலை அடித்துக் கொண்டே இருக்கும்.

**உங்கள் அன்பு மருமகள்**
***சுதர்சன் விந்தியா***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவுக்கு.....

யோகாம்பிகை அம்மா நீங்கள் ஓர்

காராம்பசு அம்மா!

அற்புத தெய்வமாய் அவனியிலே அவதரித்தீர்

புங்கநகர் பெற்றெடுத்த பூ மகளாய் வந்து நின்றீர்!

எம் நெஞ்சங்கள் நினைவு எல்லாம்

உங்கள் நினைவு அலையே!

வசந்தத்தின் தென்றலாய் வந்து உதித்த தாயாரே!

கண் நீரை சொரிய வைத்து கார்மேகம் சென்றதேனோ!

கல் நெஞ்சம் எமக்கில்லை உங்கள் சாவுதனை ஏற்பதற்கு


வான்புகழ் கொண்டவரே வண்ணத்துப் பெண்ணரசி

ஞாலத்தில் உம் புகழை கீதத்தில் பாடுகின்றோம்

சோகத்தில் யாம் வாட சொர்க்க லோகம் போனதேனோ!

**மருமகன்**

***விக்கி***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தாவின் கண்ணீர்க் காணிக்கை

அன்பின் திருவுருவாய், பாசத்தின் தாயாய்
எனது குடும்பத்துக்கு ஓர் முன்னோடியாய்,
வழிகாட்டியாய் இருந்தீர்களே அண்ணி
எனக்கு வருத்தம் வந்து விட்டது என்று
கவலைப்பட்டீர்களே அண்ணி!
உங்களுக்கு வருத்தம் என்ற உடனே ஓடி
வந்து பார்த்து உங்களுடன் நின்றேனே
கடைசி நேரத்தில் குடிக்க தண்ணீரும்
வேண்டிக் குடித்தீர்களே அண்ணி!
எப்படித்தான் அந்தக் காலனுக்கு மனம் வந்ததோ!
அந்த நேரத்தை மறக்க முடியாதுள்ளது அண்ணி!
எமையெல்லாம் விட்டு பாதியிலே சென்று வீட்டீர்களே அண்ணி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு ஒரு நிமிடம்

| | |
|---|---|
| வணங்கத் தக்கவர் | - தாயும் தந்தையும் |
| வந்தால் போகாதவர் | - புகழ் - பழி |
| போனால் வராதது | - மானம் - உயிர் |
| தானாக வருவது | - இளமை - முதுமை |
| நம்முடன் வருவது | - பாவம் - புண்ணியம் |
| அடக்க முடியாதது | - ஆசை - துக்கம் |
| தவிர்க்க முடியாதது | - பசி - தாகம் |
| நம்மால் நீக்க முடியாதது | - பந்தம் - பாசம் |
| அழிவைத் தருவது | - பொறாமை - கோபம் |
| எல்லோருக்கும் சமனானது | - பிறப்பு - இறப்பு |
| கடைத்தேற வழி | - உண்மையும் உழைப்பும் |
| ஒருவர் கெடுவது | - பொய் சாட்சி - செய்நன்றி மறப்பது |
| வருவதும் போவதும் | - இன்பமும் துன்பமும் |
| மிக மிக நல்ல நாள் | - இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - சமயோசித புத்தி |
| மிகக் கொடிய நோய் | - பேராசை |
| மிகவும் சுலபமானது | - குற்றம் காணுதல் |
| கீழ்த்தரமான விடயம் | - பொறாமை |
| நம்பக்கூடாதது | - வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| செய்யக்கூடாதது | - தவறுகள் |
| செய்ய வேண்டியது | - உதவிகள் |
| விலக்க வேண்டியது | - விவாதம் |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | - வாய்ப்பு |

**மண் மனிதனுக்குச் சொந்தமல்ல**
**மனிதன் தான் மண்ணுக்குச் சொந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தை

என் குடும்பம் பெற்ற இன்ப துன்பங்களில் எல்லாம் கூட இருந்தும் எமது பக்கபலமாக எங்கள் மாமாவுடன் நீங்கள் எங்களுக்கு ஆற்றிய அர்ப்பணிப்பை வார்த்தைகளால் சொல்வது என்பது கடினம் எங்கள் பலம் எங்கள் மாமா என்றால் எங்கள் மாமாவின் பலம் போனால் எங்கள் பலமும் போய்விடும் என்பதை அறியாமை இருந்திருப்பீர்களா? அப்படி அறிந்தும் நீங்கள் எங்களை விட்டு சென்றது ஏனோ?

நான் பெற்ற சொல்லனா துயரம் அடைந்து அதிலிருந்து விடுபட இரண்டு வருடமாக முயற்சி செய்தும் அதை விட்டு அகல முடியாமல் துடித்துக் கொண்டு இருக்கும் போது அதற்குள் நீங்களும் எம்மை துயரத்தில் தள்ளிவிட்டு போனது ஏன்? எமக்கு அறிவுரையுடன் கூடிய ஆறுதல் சொல்வீர்களே. இப்பொழுது நாம் யாரிடம் ஆறுதல் தேடுவோம்.

வன்முறையான வார்த்தைகளை நான் உச்சரித்தால் கண்டிப்புடன் பேசுவீர்களே. அவ்பேச்சை உரிமையுடன் வேறு யாரு எனக்கு இனி பேசுவார்கள். அந்த உரிமை உங்களுக்கு தானே அதிகம் உண்டு. நான் எனது மாமா மாதிரி என்று சொல்லி சொல்லி சந்தோசப்படுவீர்களே. அந்த சந்தோசத்தை நான் இனி எங்கு போய் தேடுவேன். உங்களை நான் கண்டு சரியாக ஒரு வருடத்தில் அதே நாளில் உங்களை உயிர்அற்ற உடலை காண அழைத்தது ஏன்.

இவ்வளவு காலமும் எமக்கு வழி காட்டிய நீங்கள் இனியும் உங்கள் ஆத்மா எங்களை வழிகாட்டும் என்ற நம்பிக்கையுடனே உங்கள் நினைவுகளை சுமக்கிறேன்.

**மருமகன்**
**விதுர்ஷன் (சுவிஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் போற்றி

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர் தம் சிந்தனையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருச்சிற்றம்பலம்

(ஐந்தொழில் நடத்தும் பரம்பொருள் அம்பலவாணர் ஒரு வடிவொடு ஆடல் தொழில் புரிகின்றார். வானவெளியில் தான் ஆடி உரகுயிர் களை இயக்கும் நடராஜப் பெருமானின் திருப்பெயர்களையும் திருவிளையாடல்களையும் கூறி வழிபடும் பாங்கில் இப்போற்றி அமைந்துள்ளது.)

அன்பாய் அருட்கூத் தாடுவோய் போற்றி
என்பால் கலந்த இறைவா போற்றி
ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி
ஏகமும் நடஞ்செய் எம்மான் போற்றி
இகபரம் அருளும் ஈசா போற்றி 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகங்கரை நடனத் தரசே போற்றி
ஈறில் மறைமுதல் இடையோய் போற்றி
மாறில் நடமிகு வள்ளால் போற்றி
உரையுணர் விகந்த ஒருவ போற்றி
அரைபுலித் தோலணி அப்பா போற்றி

ஊழி ஊழி உள்ளோய் போற்றி
ஆழியான் காணா அடியோய் போற்றி
எல்லையில் இன்ப நடத்தாய் போற்றி
தொல்லை வினை தீர் சுடரே போற்றி
ஏனோர்க் கரிய ஏந்தால் போற்றி

மானோர் கைக்கொள் மன்னே போற்றி
ஐயா றமர்ந்த அரசே போற்றி
வைகொள் சூலக் கையா போற்றி
ஒருகால் தொழினும் உவப்போய் போற்றி
இருகால் இசைய ஆடுவோய் போய்

ஓங்கா ரப்பொருள் உடையாய் போற்றி
பாங்காய் நடனிடு பரனே போற்றி
ஔவியம் இல்லா அரனே போற்றி
தெய்வச் சீர்பெறு செம்பொருள் போற்றி
கற்பார்க் கருள்நடம் காட்டுவோய் போற்றி

சொற்பதங் கடந்த தொல்லோய் போற்றி
காமனைக் காய்ந்த கண்ணுதல் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூமன அடியார் தொடர்போய் போற்றி
கிளரொளி அம்பலக் கிழவோய் போற்றி
வளர்வெளி ஆடிய மாதவ போற்றி

குறுங்கணிக் கொன்றை முடியாய் போற்றி
உறுநடஞ் செய்யும் உறவோய் போற்றி
கூடல் விளங்கு குருமணி போற்றி
ஆடல் அரசே அமர போற்றி
கொளக்கொளக் குறையா நிறைவே போற்றி

அளக்கொணா அன்பர் அமிழ்தே போற்றி
கோவே கூத்தா குணமலை போற்றி
சேவேற் றுக்கொடித் தேவா போற்றி
அஞ்செழுத் துட்பொருள் ஆனாய் போற்றி
நஞ்சமர் கண்ட நாயகா போற்றி

பொன்னம் பலநடம் புரிவோய் போற்றி
மும்மலம் முருக்கும் செம்மால் போற்றி
செம்மைசேர் நிறத்துச் சேவக போற்றி
அரதன சபைநடம் நிலைத்தாய் போற்றி
அருளுரு வாகிய அண்ணல் போற்றி

இன்தா மிரசபை இசைந்தாய் போற்றி
நெல்வே வியில்நடம் நிலைத்தாய் போற்றி
பல்வே றுருவாய்ப் பரந்தாய் போற்றி
குற்றால த்துறை கூத்தா போற்றி
ஊற்றறபே ரூர்நடம் உகந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரையில் மாறி ஆடியோய் போற்றி
குதிரை விற்ற கோவே போற்றி
திருபுத் தூர்நடஞ் செய்தாய் போற்றி
புலிக்கால் முனிக்கருள் பொன்னடி போற்றி
நிலைக்கப் பதஞ்சலி நேர்ந்தாய் போற்றி

உடுக்கின் ஒருகையால் படைப்பாய் போற்றி
அடுக்குங் கையால் அமைப்பாய் போற்றி
அனல்சேர் கையால் அழிப்பாய் போற்றி
புனல்சேர் செஞ்சடைப் புனிதா போற்றி
ஊன்றிய அடியால் உடுக்குவோய் போற்றி

நான்ற நற் காலாஒ நல்குவோய் போற்றி
இத்தொழில் ஐந்தும் ஏற்றொய் போற்றி
முத்தொழில் முகக்கும் முகிலே போற்றி
மைப்பிடி கண்ணி மணாள போற்றி
முப்புரம் எரித்த முதல்வா போற்றி

சங்கக் குழையணி தாயே போற்றி
செங்கண் ஏறுடைச் செல்வா போற்றி
எண்ணொடும் எழுத்தாம் இயலே போற்றி
பண்ணொடு பயன்பாட்டே போற்றி
புயலே வெயலே புரிவாய் போற்றி

அயலே வெயிலே ஆவாய் போற்றி
கரியுரிப் போர்வைக் கண்ணுதல் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியுரு அன்ன இயற்கை போற்றி
மலைமகள் இடங்கொள் மலையே போற்றி
அலைநஞ் சயின்ற ஆதி போற்றி

தெண்ணிலாச் செஞ்சடைச் சீரோய் போற்றி
எண்ணிலா நடம்பயில் எங்கோன் போற்றி
உயிர்வெளி இடையே உறைந்தாய் போற்றி
தயிர் நெய் போலத் தணவாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி

பெண்ணுள் அழகாய்ப் பிரியாய் போற்றி
அண்ட உண்டையில் அணுவே போற்றி
மண்டிலந் தோறும் வளர்ந்தாய் போற்றி
உற்றாய் உள்ளே உறுவோய் போற்றி
காற்றாய் எங்கும் கலந்தாய் போற்றி

ஆறுசோ சென்றி ஐயா போற்றி
நீறுசேர் மேனி நித்தா போற்றி
அரவொடும் பிறைமுடி அணியாய் போற்றி
இரவொடு பகல் நடம் இசைப்போய் போற்றி
கொடுகொட்டி ஆடிய கூத்தா போற்றி

படுபாண் டரங்கம் பயின்றாய் போற்றி
கபாலம் ஆடிய காலோய் போற்றி
பூபா தந்தரு புகழோய் போற்றி
மன்றில் ஆடும் மணியே போற்றி
என்றுமெம் நெஞ்சில் இருப்போய் போற்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்வலை வீசிய மீனவ போற்றி
கான்மா றியாடும் கற்பகம் போற்றி
அத்தா அம்பலத் தாடி போற்றி
முத்தா முதல்வா முக்கணா போற்றி
எட்டுரு வாக இசைந்தாய் போற்றி

நட்டம் பயிலும் நாதா போற்றி
இமயவில் வாங்கிய ஈசா போற்றி
உமையிடம் பிரியா ஒருவ போற்றி
வாழ்க உலகம் வரமருள் போற்றி
சூழ்கநல் லனவந் துறவருள் போற்றி

வீற்றிருந்தாள் அன்னை வீதி தனில் இருந்தாள்
நேற்று இருந்தாள் இன்று வெந்து நீறு ஆனாள் பால் தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏது என்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

- பட்டினத்தார் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடியேற்ற விழாவின்போது ஓத வேண்டிய திருமுறைகள்

### மூலாதார கணபதி

பண் - தக்கராகம் தலம் - திருப்புகலி

*1ம் திருமுறை*

விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே.

### மூஷிகதேவர்

பண் - காந்தார பஞ்சமம் தலம் - திருப்புகலி

*3ம் திருமுறை*

இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலின வரிநெடுங் கண்ணியோடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலனள் தொறும் இன்புறநிறைமதி யருளினனே

### இடபதேவர்

பண் - காந்தார பஞ்சமம் தலம் - திருஇராமேச்சுரம்

*3ம் திருமுறை*

சனி புதன் ஞாயிறு வெள்ளிதிங் கட்பல தீயன
முனிவது செய்து கந்தானை வென் றவ்வினை மூடிட
இனியருள் நல்கிடென் றண்ணல் செய்த இராமேச்சுரம்
பனிமதி சூடிநின் றாடவல் லபர மேட்டியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்மதேவர்

**பண் - நட்டபாடை** **தலம் - திருஇடும்பாவனம்**

***1ம் திருமுறை***

மனம் ஆர்தரு மட வாரொடு
மகிழ் மைந்தர்கள் மலர்தூய்த்
தனம் ஆர்தரு சங்கக் கடல்
வங்கத்திரள் உந்திச்
சினம் ஆர்தரு திறல் வாள் எயிற்று
அரக்கன் மிகு குன்றில்
இனமாதவர் இறைவர்க்கு இடம்
இடும்பாவனம் இதுவே.

## மயூரதேவர்

**பண் - இந்தளம்** **தலம் - திருமறைக்காடு**

***2ம் திருமுறை***

சதுரம் மறை தான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக் காட்டுறை மைந்தா
இதுநன் கிறை வைத் தருள்செய்த எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவசக்தி தேவர்களுக்கு உரிய திருமுறைகள்

**பிரமதேவர் - மத்தி**

**பண் - மேகராகக் குறிஞ்சி** **தலம் - திருக்கச்சியேகம்பம்**

***1ம் திருமுறை***

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின் விரிநூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சிதன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற அணங்கினோ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே.

**இந்திரதேவர் - கிழக்கு**

**பண் - காந்தாரம்** **தலம் - திருஆலவாய்**

***2ம் திருமுறை***

ஆற்றல் அடல் விடையேறும் ஆலவாயான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

**அக்கினி தேவர் - தென் கிழக்கு**

**பண் - கொல்லி**

முன்னைச் செய்வினை இம்மையில் வந்து
மூடும் ஆதலின் முன்னமே
என்னை நீதியக் காதெழுமட
நெஞ்சமே எந்தை தந்தையூர்
அன்னச் சேவலோ டூடிப் பேடைகள்
கூடிச் சேரு மணி பொழில்
புன்னைக்கன்னி கழிக்கணாறும்
புறம் பயற்தொழப் போதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யமதேவர் - தெற்கு**

**பண் - கௌசிகம்**

ஆதியந்த மாயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளோர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையால் கிளசுதருக்கி னார்ககல்லால்
ஓதிவந்த வாய்மையால் உணர்துரைக்க லாகுமே.

**நிருதி தேவர் - தென்மேற்கு**

**பண் - நட்டபாடை**

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவரே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

**வருண தேவர் - மேற்கு**

**பண் - ஸ்ரீகாமரம்** **தலம் - திருமயிலாப்பு'ர்**

***2ம் திருமுறை***

உரிஞ்சாய வாழ்க்கை அமடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க் கௌடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரத் தான்தன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாயு தேவர் - மேற்கு

**பண் - தக்கேசி** **இராகம் - காம்போதி**

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலுந் திருவடி பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப் பெயரல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்

### குபேர தேவர் - வடக்கு

**பண் - தக்கராகம்** **இராகம் - காம்ரோதி**

**தலம் - திருக்கோலக்கா**

***1ம் திருமுறை***

பெண்மான் பான மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே.

### ஈசான தேவர் - வடகிழக்கு

**பண் - சாலாகாண (சாதாரி)**

***3ம் திருமுறை***

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீரும தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டேஸ்வர நாயனார் தேவார புராணம்

**சண்டேஸ்வரர் உற்சவத்தின் போது பாட உகந்தது**

பண் - கௌசிகம் இராகம் - பைரவி

*3ம் திருமுறை*

கடிசேர்ந்தபோது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை யறவெட்டிட முகடகண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ண மறிவார் சொலக் கேட்டுமன்றே.

## புராணம்

**சண்டேஸ்வர நாயனார் புராணம்**

*12ம் திருமுறை*

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கியனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவுஞ் சூடு வனவு முனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோ மென்றங் கவர் பொற்றட முடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினான்.

- சிவபெருமான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்கள்

ஈஸ்வரம் என்ற சொல்லிற்கு ஐஸ்வர்யம் என்பது பொருள். ஈஸ்வரன் - ஈச்சரன் - ஐஸ்வர்யத்தை உடையவன். வாழ்க்கையின் செழிப்பைத் தருவது செல்வம் மட்டும் அல்ல. அழகு, புகழ், பெருமை, நற்குடிப்பிறப்பு, ஒழுக்கம், அன்பு, காருண்யம், அறம், கொடை, நல்ல இல்லறம், அறிவறிந்த மக்கள், நற்சுற்றம், நண்பர்கள், பெற்றோர் யாவும் ஐஸ்வர்யமே. தன்னை வணங்குபவர்களுக்கு, நீங்காத ஐஸ்வர்யத்தை அருளும் பஞ்ச ஈச்சரத் தலங்கள் இலங்கையில் அமைந்துள்ளது நாம் செய்த தவப்பயனே. அத்தலங்களின் சிறப்பை சுருக்கமாகக் காண்போம். இலங்கையின் கிழக்கில் திருக்கோணேச்சரமும், மேற்கே முன்னேச்சரமும், வடமேற்கே திருக்கேதீச்சரமும், வடக்கே நகுலேச்சரமும், தெற்கே சந்திரசேகர ஈச்சரமும் (தொண்டீச்சரம்) அமைந்து காவலரண்களாக விளங்குகின்றன. இப்பஞ்ச ஈச்சரங்களின் விபரங்களின் தொகுப்பு வருமாறு:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேச்சரம் கிழக்கு

| | | |
|---|---|---|
| இடம் | - | கிழக்குத்திசையில் கடலலை தாலாட்டும் தொன்னகரம். |
| இறைவன் | - | திருக்கோணேஸ்வரர், கோணநாதர் |
| இறைவி | - | ஸ்ரீ மாதுமையம்பாள் |
| தீர்த்தம் | - | பாவநாசம் (தீர்த்தக்கிணறு) |
| தலமரம் | - | கல்லால் மரம் |
| வழிபட்டோர் | - | இராவணன், வராமதேவன், குளக்கோட்டன், அகத்தியன் |
| பாடல்கள் பாடியவர்கள் | - | நிரைகழலரவம் (திருஞானசம்பந்தர்) விலைக்கு மேனியில் அணிக்கோவை (திருப்புகழ்) |
| நூல்கள் | - | தஷிணாகைலாச புராணம், கோணேச கல்வெட்டு, கோணமாமாலை அந்தாதி, கோணேசர் ஆற்றுப்படை, ராஜாவலிய என்ற பௌத்த நூல், மச்சபுராணம், குடுமியாமலைசாசனம் |

## முன்னேச்சரம் மேற்கு

| | | |
|---|---|---|
| இடம் | - | இலங்கையில் வடமேல் மாகாணத்தில் சிலாபம் நகரின் கீழ் திசையில் ஒரு கல் தொலைவில் அமைந்துள்ளது. முன்னைநாதர் முன்னேஸ்வரர். |
| இறைவி | - | வடிவாம்பிகை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தீர்த்தம் | - | மாயவனாறு (தெதுரு ஓயா) |
| தலமரம் | - | அரச மரம் |
| வழிபட்டோர் | - | இராமபிரான், குளக்கோட்டன், 6ம் பராக்கிரமபாகு, 9ம் பராக்கிரமபாகு, கீர்த்திராஜசிங்கன் |
| நூல்கள் | - | ஸ்ரீ முன்னேஸ்வர மாண்மியம், திருஊஞ்சல், முன்னேஸ்வரர் நவமணி மாலை, முனிஸ்வராந்தாதி, வடிவழகி பதிகம், திருவிருத்தம், ஸ்ரீ வடிவாம்பிகா பஞ்சரத்னம், முன்னேஸ்வரக்கும்மி கப்பல். |

## தொண்டீஸ்வரம் தெற்கு

| | | |
|---|---|---|
| இடம் | - | மாத்தறை மாவட்டத்தில் தேவேந்திர முனை எனப்படும். தெவிநுவரவில் அமைந்துள்ளது. |
| இறைவன் | - | போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட சிவாலயம் சந்திரசேகரர் |
| இறைவி | - | தெரியவில்லை |
| தீர்த்தம் | - | தெரியவில்லை |
| தலமரம் | - | தெரியவில்லை |
| வழிபட்டோர் | - | புவனேகபாகு |
| பாடல்கள் பாடியவர்கள் | - | தெரியவில்லைல |
| நூல்கள் | - | தெரியவில்லை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீஸ்வரம் வடமேற்கு

| | | |
|---|---|---|
| இடம் | - | வடமேல் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் மாந்தோட்டம், மாந்தை, என்னுமிடத்தில் |
| இறைவன் | - | திருக்கேதீஸ்வரநாதர், நாகநாதர் |
| இறைவி | - | கௌரியம்பாள் |
| தீர்த்தம் | - | பாலாவி |
| தலமரம் | - | வன்னி மரம் |
| வழிபட்டோர் | - | கேது, துவட்டா, மயன், மண்டோதரி, ராமன், அகத்தியர் |
| பாடல்கள் பாடியவர்கள் | - | "விருதுகுன்றமாமேரு" (திருஞானசம்பந்தர்) "நத்தார்படை ஞானன்பசு" (சுந்தரமூர்த்தி நாயனார்) |
| நூல்கள் | - | தஷிணாகைலாச மான்மியம், மாந்தைப் பள்ளு, திருக்கேதீச்சரப்புராணம், திருக்கேதீச்சரநாதர், திருப்பதிகம், திருக்கேதீச்சரநாதர்கிள்ளை விடுதூது, திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல், கௌரிநாயகி, பிள்ளைத்தமிழ் |


## நகுலேச்சரம் வடக்கு

| | | |
|---|---|---|
| இடம் | - | இலங்கையில் வடபால் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ளது. (கீரிமலை) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இறைவன் | - | நகுலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரர் |
| இறைவி | - | நகுலேஸ்வரி, நகுலநாயகி, திருத்தம்பலேஸ்வரி |
| தீர்த்தம் | - | கண்டகி தீர்த்தம் |
| தலமரம் | - | கல்லால மரம் |
| வழிபட்டோர் | - | விஜயன், நகுலமுனிவர், முசுகுந்தன், நளன், அருச்சுனன், மாருதப்புரவீக வல்லி, சுசங்கீத்தன், உக்கிரசிங்கன் |
| நூல்கள் | - | நகுலாசல புராணம், நகுலேஸ்வர மான்மியம், நகுலமலைக்குறவஞ்சி, நகுலேசர் ஊஞ்சல், நகுலேசர் சதகம், நகுலேசுவரர் வினோத விசித்ரகவிப் பூங்கொத்து |




**நகுலேச்சரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கேதீஸ்வரம்



திருக்கோணேச்சரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாரந்தனை தான்தோன்றி
## ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருவூஞ்சல்

கார்நிற மேனிக் கற்பகக் களிறே
சீர்தரு மூலச் சித்தி விநாயகனே
பேருடைப் பண்டார புலமதிற் தோன்றிய
தாரணி மார்பன் மனோன்மணி யம்மை
பாரினைப் படைத்த பராசக்தி தன்மேல்
நேரிலா வூஞ்சல் பாடநீ அருளுதியே
செம்பவ ளக்கால் நாட்டி நன்முத்
தம்பயி றாகஆணிப் பொற்பல கையிட்டு
எம்மா திரமும் ஏற்று எழிலரசி
இம்மா நிலத்திற் றானே தோன்றிய
கொம்பை முல்லைக் கோகிலமே யேறிமர்த
தம்மா மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

மெய்யெனும் நற்பவளக் கால்கள் நாட்டி
உய்யும் மனமதை விட்ட மாக்கி
பொய்யாத நான்மறை யேநற் கயிறதாக
செய்ய புவனங்கள் பலகை யாம
துய்ய நாரந்தனை யிற்றாளே தோன்றி
பெய்வளையே மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

விண்ணில் உலாவுமிரு சுடர்கள் தீபமாக
எண்ணில் பலவுருக்கள் விதானமாக
தண்ணளிக் கற்பத் தருக்கள் பந்தராக
மண்ணில் வருமிளந் தென்றல் கவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய சேர்நாரந் தனைப்பதி யிற்றோன்றிய
கண்மணியே மனோன்மணி யாளோஆடீ ரூஞ்சல்

சொல்லுடை வாணியுமே கவிகை கொள்
நலமுடைய லகீரதியார் கவிரி வீசத்
துலங்கும் ஐரணியாள் படிக மேந்தப்
பலவான வரம்பையர் பணிவிடை செய்ய
வளமான நாரந்தனைத் தான்தோன்றி யம்மையே
குலவிளக்கே மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

சோதியெறி மணிமகுட மெழிலாய் மின்னத்
தீதிலா நெற்றி யணிகள் குண்டலங்கள்
சாதிமலர் மாலைகளு மணிசெய் யணங்கே
பேதித்து நம்மை வளர்க்கும் தாயே
ஆதியடியார் வாழ்நாரந் தனையிற் றோன்றிய
நீதியே மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

தும்புரு நாரதர் கீதம் பாட
அம்பரத் துருப்பசி முதலோர் நடனமாட
உம்பரத் தோர்பாரி சாதமழை பொழிய
செம்மாதும் நாமகளும் வடந்தொட் டாட்ட
அம்புவியில் நாரந்தனைப் பதியிற் தோன்றி
செம்பதும மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

கதிராரு மணியணிக் குண்டங்களாட
புதிதான வளையாடக் கொண்டையணி மலர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிபோல நுதலணிச் சுட்டி யாடச்
கதியான மலரடிச் சிலம்பு மாட
அதிகவள மேவும் நாரந்தனைப் பதியின்
நிதியமே மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

அடியவர் அல்லல் அகற்றிட உதைத்துப்
படியினிற் சைவநெறி யோங்கவே பாடிக்
கடிதாகப் பகைவோடக் கையுங் கொட்டி
கொடிபோலு மென்மருங் கசைத்து ஆட
நெடிதான வளம்பெருனு நாரந்தனைப் பதியிற்
குடிவந்த மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

துய்ய உடநிடதப் பொருளே ஆடீரூஞ்சல்
வையத்தை யீன்றாளே ஆடீரூஞ்சல்
உய்யவே தான்தோன்றி யேஆடீ ரூஞ்சல்
தையலே ஆரமுதே ஆடீருஞ்சல்
செய்ய மனோன்மணி யாளேஆடீ ரூஞ்சல்

***வாழி***

சங்கரர்தம் மிகுகருணை விழிகள் வாழி
சவுந்தரிய மனோன்மணி யம்மை வாழி
பொங்கடற் கள்தடிந்த புலவர் வாழி
பூசுரரும் அறநெறியும் பொலிந்து வாழி
துங்கக் கலிமுகத்துத் தூமணியோன் வாழி
தங்கதளிர் சேத்திர பாலர் வாழி
திங்கள்மு கில்மும்மாரி பொழிந்து வாழி
திருவிளங்கும் நாரந்தனைப் பதிசிறந்து வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எச்சரிக்கை

சீர்பெருகு நாரந்தனைப் பதிவாழ்வே எச்சரிக்கை
தாரணியும் மார்பினனே மனோன்மணியே எச்சரிக்கை
நேரிலாப் பேரருட் சக்தியே எச்சரிக்கை
பாரினிலே யெமைக்காக யம்மையே எச்சரிக்கை
பேரிலங்கு தான்தோன்றி யம்மையே எச்சரிக்கை
தேரூர்ந்து வருமெங்கள் மனோன்மணியே எச்சரிக்கை

### பராக்கு

போற்றிடும் பண்டார புலமிருப்பாய் பராக்கு
சாற்றிடும் வேதப்பொரு ளாயிருப்பாய் பராக்கு
தோன்றிடும் தான்தோன்றி அம்மையே பராக்கு
மாற்றுயர் பொன்னே மனோன்மணியே பராக்கு
நோற்றுயர் அடியார்தம் வாழ்வே பராக்கு
சீற்றமிலாச் செந்துயர்வாய் யெம்மயிலே பராக்கு
கூற்றுவனை யுதைத்தான் தான்பாகத்தாய் பராக்கு
வீற்றிருந்து அருளாட்சி செய்பவளே பராக்கு
ஊற்றாயே முள்ளத்தே யெழுவாய் பராக்கு
ஏற்றிடும் தொண்டர்க் கருள்வாய் பராக்கு
தேற்றியே யெம்குறை போக்குவாய் பராக்கு
நாற்றமலர் நாயகியே மனோன்மணியே பராக்கு.

### லாலி

லாலி லாலி சுபலாலி லாலி
மன்னுநாரந் தனைப்பதி வாழிதேவி லாலி
எவ்வுரு மீன்றருளு மிறைவி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுமடி யாரொவர்க்கு மினியை லாலி
சித்தியொடு முந்தியருள் செல்வி லாலி
சிவனிட மமர்ந்துறை யுந்தேவி லாலி
சிவனிட மமர்ந்தறை யுந்தேவி லாலி
பாவலர்கள் பாடவருள் பரையே லாலி
பற்றுடனே மிகக்கவருள் செய்லாலி லாலி

***மங்களம்***

தான்தோன்றி யம்மைக்கு மங்களம்
தாரமருங் கரிமுகத்தானுக்கு மங்களம்
வான்புகழும் வடிவேலனுக்கு மங்களம்
வார்சடை வயிரவர்க்கு மங்களம்
தேன்மொழியாள் மனோன்மணிக்கு மங்களம்
தில்லை நடராசனுக்கு மங்களம்
மான்விழியா ளடியார்க்கு மங்களம்
மாதவ நாரந்தனைக்கு மங்களம்

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிக்கவி

### கொடியேற்றத்திற்கு ஆயத்தமானதும் பாடப்படுவது

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே யிடம் ஒன்றுமே விடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராம்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும் படிக்கொடி கட்டினேன்.

பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

- உமாபதி சிவாச்சாரியார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திக்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமிதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனும்காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறி கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவறியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கெ உறுமெமக்கும்
ஏனோர்க்குத் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்உருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறவாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடைத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசெ தொழும் பாய்ப் பணிசெய்வோம்.
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய். 9

பாதாளம் எழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருளும் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணொரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்த்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை மேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாரும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாருங்
கூத்தனின் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பவருஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைத்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைபோதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கனலாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
போதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பாய்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பிரித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவாகள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலாதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிர்சேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிக்
பெண்ணேயிப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் எனக்கொன்றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ: செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கேழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமிப் பட்டர்
### அருளிய
# அபிராமி அந்தாதி
## காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமை மைந்தனே உலகேழும் பெற்ற
சீரபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே.

## நூல்
### யோகத்தின் முதற்படிக்கு

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மின்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. 1

### முக்கால ஞானமும் முழுமையாகப் பெற

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனையே. 2

### தளைஅறுக்க

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம் பெறுவதற்கு

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே. 4

## கொடிய துன்பங்கள் நீங்க

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே. 5

## பெறுவதற்கரிய கீர்த்திகளைப் பெற

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே. 6

## சித்தம் சபலமடையாதிருக்க

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே! 7

## மிருக இச்சைகளினின்றும் விடுபட

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே. 8

## பசிப்பிணி போக

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே. 9

## முத்திநிலை அறிய

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே. 10

## என்றும் இன்பங்கள் தழைக்க

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தத் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே. 11

## தியான யோகத்தில் வெற்றியடைய

கண்ணியதுன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியதுமுன் இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் எது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயைச் சரணடைய

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே. 13

## பரமானந்த சுகம் பெற

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர்நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே. 14

## இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெற

தண்ணளிக்கென்று முன்னே பல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

## அனைத்தும் அறியும் ஆற்றல் பெற

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே. 16

## மங்கையர் அழகு நலன் பெற

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசெய ஆனன சுந்தரவல்லி துணை இரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர்தம்
மதிசயமாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே. 17

## மரணத்தை வெல்ல

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே. 18

## ஸ்ரீசக்கர வழிபாட்டின்போது

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19

## கபடில்லா நண்பர்களைப் பெற

உறைகின்ற நின்திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே. 20

## பெண்மை நலன்கள் சிறக்க

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகலகலா மயில்தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண் கொடியே. 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறவா வரம் பெருக

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே. 22

## சத்திய உறவுகளைக் காண

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன்மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே. 23

## தீராத நோய்கள் தீர

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே. 24

## எண்ணிய எண்ணியபடி எய்த

பின்னே திரிந்துன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே. 25

## நாவன்மை பெற

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ்பூங்கடம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தும் குழல்அணங்கே மணம் நாறும் நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே. 26

## மனமயக்கம் மாற

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்தழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27

## ஞானமும் முக்தியும் கைகூட

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே. 28

## அட்டமா சித்திகளை அடைய

சித்தியும் சித்தி தரும் தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தைஅன்றே. 29

## அச்சம் அகற்ற

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கினி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே. 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோக மாயை விலக

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில் வந்திங்கு,
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோழியர் மேல் வைத்த ஆசையுமே. 31

## விபத்துக்கள் நேராதிருக்க

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் பட இருந்தேனை நின்பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே. 32

## எப்போதும் தாயின் துணைகிடைக்க

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. 33

## பயிர் வளர, பொன் கொழிக்க

வந்தே சரணம் புகும் அடியார்க்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்க்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

## வானோர் அடையாப் பேறுபெற

திங்கள் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ தரங்கக் கடலுள்
வெங்கட் பணியனை மேல்துயில் கூரும் விழுப்பொருளே. 35

## வாணிபத்தில் வளங்காண

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து
இருளேது மின்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே! 36

## ஆடை அணிகலன் கிடைக்க

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையானிடம் சேர்பவளே. 37

## இந்திர போகம் அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38

## அகால மரணத்தைத் தவிர்க்க

ஆளுகைக்கு உன்தன் அடித்தாமரைகளுண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாணுதலே. 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்வினைப் பயன்கள் முழுமைபெற

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே. 40

## கணவன் மனைவி உறவு கனிய

புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணியிங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணி நம் சென்னியின்மேல் பத்மபாதம் பதித்திடவே. 41

## பொது மக்கள் ஆதரவைப் பெற

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலை கொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே. 42

## பகை நீங்க

பரிபுரச்சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணி இன்சொல்
திரிபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுரவஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43

## மனைமாட்சி பெற

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வம் உண்டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

## பாவ வினைகள் பற்றாதிருக்க

தொண்டு செய்யாது நின்பதந்தொழாது, துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ? அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கை தவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றே. 45

## எந்நிலையிலும் இறையருள் கிட்ட

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே. 46

## யோகத்தில் உயர

வாழும் படியொன்று கண்டுகொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

## உடல் பற்றினை விட

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண பயத்தினின்றும் விடுபட

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை யடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே. 49

## இறையருள் கைகூட

நாயகி நான்முகி நாராயணி கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
நாயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே. 50

## பிறப்பு இறப்பில்லாப் பெருவாழ்வுபெற

அரணம் பொருளென்று அருள் ஒன்றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன்அடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே. 51

## வாழ்க்கைச் செல்வங்கள் சிறக்க

வையகம் துரகம் மதகிரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே. 52

## தவத்தின் உயர்வு காண

சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம்பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னம்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னத் தனியிருப்பார்க்கு இதுபோலும் தவம் இல்லையே. .53

## வறுமை நீங்க

இல்லாமை சொல்லி ஒருவர் தம் பாற் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

## பற்றற்ற நிலையடைய

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாள் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒளியினும் உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே. 55

## அனைவரையும் தன்பால் ஈர்க்க

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றன் நெஞ்சின் உள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா! இப்பொருளறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே. 56

## பொருள் தேடிப் பிறரைச் சாராதிருக்க

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே 57



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் அமைதி பெற

அருணாம் புயத்தும் என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர் நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே. 58

## நல்லொழுக்கம் உடைய மக்களைப் பெற

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராகி நின்றாய் அரியாரெனினும்
பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே. 59

## மெய்யறிவு விளங்க

பாலினுஞ் சொல் இனியாய் பனிமாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும், சாலநன்றோ அடியேன் முடை நாய்த்தலையே. 60

## நம்மை நாமே அறிந்து உய்ய

நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறு பெற்றேன்
தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கைச்சியே. 61

## அச்ச உணர்வு நீங்க

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என்சிந்தையதே. 62

## நல்லறிவு பெற

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே. 63

## மனம் ஒருநிலைப்பட

வீணே பலிகவர் தெய்வங்கள் பால்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திரு மேனிப்ரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசைநான்கும் ககனமுமே. 64

## மக்கட் செல்வம் விளங்க

ககனமும் வானும் புவனமும் காணவில் காமன் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகண மும்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீசெய்த வல்லபமே. 65

## வித்தைகள் விளங்க

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலப்பெருமை காக்க

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்ட பலிக்குஉழலா நிற்பர் பாரெங்குமே. 67

## இன்பங்களைத் துய்க்க

பாரும் புனலும் கனலும் வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவையொளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம்இல்லையே. 68

## பெறற்கரிய பேறுபெற

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வுஅறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 69

## இசையில் புலமை எய்த

கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே. 70

## மனம் உறுதியடைய

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனிமாமதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே. 71

## பிறவித்துயர் நீங்க

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனி யான்பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே. 72

## தாயைச் சரணடைய

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே. 73

## தொழில் பிறந்த முதன்மை பெற

நயன்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

## விதியை முறியடிக்க

தங்குவர் கற்பகத் தருவின் நிழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாய் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திரு மேனி குறித்தவரே. 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமைகள் நிலைநாட்ட

குறித்தேன் மனத்தில் நின் கோலமெல்லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்சபாணி பயிரவியே! 76

## பகைக்கு அஞ்சாதிருக்க

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

## அஷ்ட யோகங்களையும் அடைய

செப்பும் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விளியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணைவிழிக்கே. 78

## சிற்றினம் சேராதிருக்க

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்கள் செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே. 79

## எல்லையில் மகிழ்ச்சி பெற

கூட்டியவா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடமாடகத் தாமரை ஆரணங்கே. 80

## நற்பண்புகள் வளர

அணங்கே அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீவைத்தபேரொளியே. 81

## மறதியைப் போக்க

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே. 82

## அடைய முடியாதவற்றை அடைய

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லர் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

## சங்கட நிலையினின்றும் விடுபட

உடையாளை ஒல்கும்செம்பட்டுடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை தயங்கும் நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னையினிப்
படையாளை உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே. 84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவினை அகல

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்துமாலையுமே. 85

## படைக்கருவிகளால் தீங்கு நேராதிருக்க

மால் அயன் தேட மறைதேட வானவர் தேட நின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

## செயற்கரிய செய்ய

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகங் கொண்டாளும் பராபரையே. 87

## அம்மையின் அருள்பெற

பரமென்று உனை யடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே. 88

## யோக சித்தி அடைய

சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறக்கந்தர வந்து உடம்போடு உயிர்உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது என் முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே. 89

### பிரிந்தவர் கூட

வருந்தா வகையென் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை விண்மேவும் புதல்வருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியளே. 90

### (சட்ட பாராளுமன்ற) மன்றத்தமர்ந்து கோலோச்ச

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்அனை யாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே. 91

### மனப்பக்குவம் அடைய

பதத்தே உருகிநின் பாதத்திலே மனம்பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

### ஞான ஒளி துலங்க

நகையே இ∴திந்த ஞானமெலாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ் முலைமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனநோய்கள் தீர

விரும்பித் தொழும் அடியார் விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே. 94

## ஆண்டவனைச் சரணடைய

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயுமில்லை உனக்கே பரம் எனக்கு உள்ளம் எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே. 95

## தாழாத கீர்த்தியடைய

கோமளவல்லியை அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலாமயில் தன்னை தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே. 96

## தருமம் தழைக்க

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர் தங்கோன்
போதில் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

## வஞ்சனைகளினின்றும் விடுபட

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்த தெங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப் பூங்குயிலே. 98

## பக்திப் பேரின்பத்தில் நம்மை மறக்க

குயிலாய் இருக்கும் கடம்பா அடவியிடை கோலவியன்
மயிலாய் இருக்கும் இமையாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே. 99

## சரணம் அடைய வழி

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே.
100

## நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
28.11.1939

விண்ணில்
05.12.2017

நாரந்தனை மக்கள் சங்க நிர்வாக உறுப்பினர்
சுந்தரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

## அமரர் இராமலிங்கம் யோகாம்பிகை

சுடர் விட்டுத் தீபமாய் எரிந்த எம் குலவிளக்கே
பாதியிலே உம் உயிர் பறிபோகும் என யாரும் எண்ணவில்லை
காலனவன் உம் கணக்கை முடித்து விட்டானோ அல்லது
பொய்யான வாழ்வு போதும் என நினைத்திரோ
ஐயோ! உம் பெயர்சொல்லி இனி யார்தான் குரல் தருவார்
நிலையில்லா இவ்வுலகில் நிலைத்திட்ட உம் அன்பினை
மறக்க முடியாது தவிக்கின்றோம்...

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாரந்தனை
ஊர்காவற்றுறை.
08.12.2017

- பிரிவால் துயருறும் -
நாரந்தனை மக்கள சங்கம்

சரவணா அச்சகம், யாழ்ப்பாணம். 021 221 9020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
1939
.
11
.
28



மறைவு
2017
.
12
.
05

நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய
சைவமகாசபையின் செயலாளர் திரு.க.இராமலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியார்

## அமரர் திருமதி யோகாம்பிகை இராமலிங்கம்

அன்பு, அறிவுக்கும் என அனைத்திற்கும் இலக்கணமாய் அவனியிலே
வாழ்ந்து மீளாத்துயில் கொண்டு நீள் துயரைத் தந்து
சென்றீர் எம் ஆறாத்துயரை யாரிடம் சொல்லியழ
உதவியென்று கேட்டு வந்தால் மறுக்காத
உள்ளம் கொண்ட அன்புத் தெய்வமே
பாசமிகு கணவனும் ஆசை மகனும் உற்றாரும், உறவினரும்
உமையிழந்து தவிக்கையிலே போதும் போதும் இப் பிறப்பு
என்று எண்ணி விடை கொடுத்து விண்ணகம் சென்றீரோ
காலனவன் எமைவிட்டு கணப்பொழுதில் எமைப்பிரிக்க
காலமெலாம் உம் நினைப்பில் கலையாது நாம் இருப்போம்



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
08.12.2017

சைவமகா சபையினர்.

யாழ் பிறின்டேர்ஸ் யாழ் 0779176840



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

நாரந்தனை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் அவர்களின்
அன்புத் துணைவியாரான

## அமரர்
## திருமதி யோகாம்பிகை இராமலிங்கம்



தோற்றம் 1939.11.28 | மறைவு 05.12.2017

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையில்
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ வாழ்ந்த அன்புத் தெய்வமே
கைபிடித்த கணவன் ஏங்கி ஏங்கி தவிக்க
கடல் கடந்து நிற்கும் ஆசை மகன் சிந்தை கலங்க
கண்முன்னே நீங்கள் வாழ்ந்த காலங்கள்
கனவாகிப் போனதுவே !
நோய் என்ற பிடியில் சிக்கி
காலன் அவன் உம் உயிரை கவர்ந்தானே...
உங்கள் மறைவில் மனம் நொந்து
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

அன்னாரின் பிரிவின் துயரில்
நாரந்தனை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்
ஊர்காவற்றுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு

28 . 11 . 1939

உதிர்வு

05 . 12 . 2017

## அமரர் இராமலிங்கம் யோகாம்பிகை

இல்லாள், அவள் நல்லாள் எனச்
சொல்லார் இல்லார் எம்மூரில்,
பொன்கொடுதீவு தந்த பொன்னே,
நாரந்தனையூர்க் குடிபுகு பெண்ணே.

இராமன் அவர்க்கோர் சீதை,
லிங்கம் அவர்க்கோர் அம்பிகை,
இராமலிங்கம் இவர்க்கோர் யோகாம்பிகை
என விதியெழுத.

வருவோரை எல்லாம் வரவழைத்து,
அரவணைத்து விருந்தளிக்கும் நீவிர்
உமை பிரிக்க நினைத்த விதிக்கு
விருந்தளிக்க நினைத்தீர் போலும்.

நீர் போய் வராத சாலைபொன்று,
உள்ளதுமோ இந்த நாரந்தனையூர் சோலையிலே
எம் ஊர் சோலைவன பற்றையெல்லாம்
சோகித்து நிக்குதம்மா.

நின் கணவர் செய் பணிக்கு,
நிலை தூண் நீர் ஆனிரம்மா
அவர் பெயரில் பாதியையும்
உயிரில் மீதியையும் நீர் கொண்டு சென்றீரம்மா.

நீர் சேர்த்த பெரும் செல்வம், அந்த
ஒரு செல்வம் வெந்துவிட்டு நிக்குதம்மா
உடல் உயிர் திறந்தாலும்
உம் நினைவுகள் என்றும் எம்முடன் நிழலாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

**விவசாய சம்மேளனம்**
**நாரந்தனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி யோகாம்பிகை இராமலிங்கம்

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை இராமலிங்கம் அவர்கள் கடந்த (05.12.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், இராமலிங்கத்தின் (முன்னாள் சிங்கர் கம்பனி விற்பனை முகவர், ஊர்காவற்றுறை) பாசமிகு மனைவியும், சுரேஸ்கரனின் (சுவிஸ்) அன்புத் தாயாரும், மாஷாவின் (சுவிஸ்) அன்பு மாமியும், மிதுர்ஷா (சுவிஸ்), மிதுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சுமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை - கனடா), பாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை - திருகோணமலை), Dr.பேரின்பநாதன், இராஜராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவநாதன், உருத்திரமூர்த்தி, தற்பராதேவி (லண்டன்), யோகநாதன் (சுவிஸ்), லோகேஸ்வரி (நோர்வே), மகேஸ்வரி ஆகியோரின் அண்ணியும், துரைசிங்கம் (ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்), காலஞ்சென்றவர்களான கணேசன், சித்திரவேலு மற்றும் நவமணி, தங்கராசா ஆகியோரின் மைத்துனியும் கனகரூபவதி, தனலட்சுமி, காலஞ்சென்ற சிவஞானலிங்கம் மற்றும் பிறேமாவதி (சுவிஸ்), வைரவநாதன் (நோர்வே), காலஞ்சென்ற இன்பலிங்கம் ஆகியோரின் சகலியும், திருமதி கலைச்செல்வி விக்னேஸ்வரன் (ஆசிரியை - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) அவர்களின் சிறிய தாயாரும், விஜிதா, வினோதன், வித்தியா, விந்தியா, விதுர்ஷன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 12.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

நாரந்தனை வடக்கு, இராமலிங்கம் (கணவர்) - 077 605 4082,
ஊர்காவற்றுறை. (1884) சுரேஸ் (மகன் -சுவிஸ்) - 0041763863974



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி யோகாம்பிகை இராமலிங்கம்

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை இராமலிங்கம் அவர்கள் கடந்த (05.12.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகாத்தைபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் இராமலிங்கத்தின் (முன்னாள் சிங்கர் கம்பனி விற்பனை முகவர், ஊர்காவற்றுறை) பாசமிகு மனைவியும் சுரேஸ்காவின் (சுவிஸ்), அன்புத் தாயும் மானஷாவின் (சுவிஸ்), அன்பு மாமியும் மிதுர்ஷா (சுவிஸ்), மிதுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை, கனடா), பாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை, திருகோணமலை), Dr. பேரின்பநாதன், இராஜராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவநாதன், உருத்திரமூர்த்தி, தற்பராதேவி (லண்டன்), யோகநாதன் (சுவிஸ்), லோகேஸ்வரி (நோர்வே), மகேஸ்வரி ஆகியோரின் அண்ணியும் துரைசிங்கம் ( ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் ), காலஞ்சென்றவர்களான கணேசன், சித்திரவேலு மற்றும் நவமணி, தங்கராசா ஆகியோரின் மைத்துனியும் கனகரூபவதி, தனலட்சுமி, காலஞ்சென்ற சிவஞானலிங்கம் மற்றும் பிறேமாவதி (சுவிஸ்), வைரவநாதன் (நோர்வே), காலஞ்சென்ற இன்பலிங்கம் ஆகியோரின் சகலியும், திருமதி. கலைச்செல்வி விக்கினேஸ்வரன் (ஆசிரியை - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) இன் சிறிய தாயாரும், விஜிதா, வினோதன், வித்தியா, விந்தியா, விதுர்ஷன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று பி.ப 12.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 077 605 4082



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி
# யோகாம்பிகை இராமலிங்கம்

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை இராமலிங்கம் நேற்று (05.12.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் இராமலிங்கத்தின் (முன்னாள் விற்பனை முகவர் - சிங்கர் கம்பனி, ஊர்காவற்றுறை), பாசமிகு மனைவியும் சுரேஸ்கரனின் (சுவிஸ்) அன்புத் தாயாரும் மாலஷாவின் (சுவிஸ்) அன்பு மாமியும் மிதுர்ஷா (சுவிஸ்), மிதுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), கமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை - கனடா), பாக்கிய லட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை - திருகோணமலை) Dr.பேரின்பநாதன், இராஜராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவநாதன், உருத்திர மூர்த்தி, தர்பாரதேவி (லண்டன்), யோகநாதன் (சுவிஸ்), லோகேஸ்வரி (நோர்வே), மகேஸ்வரி ஆகியோரின் அண்ணியும் துரைசிங்கம், காலஞ்சென்றவர்களான கணேசன், சித்திரவேலு மற்றும் தவமணி, தங்கராசா ஆகியோரின் மைத்துனியும் கனகரூபவதி, தனலட்சுமி, காலஞ்சென்ற சிவஞானலிங்கம், வைரவநாதன், காலஞ்சென்ற இன்பலிங்கம் ஆகியோரின் சகலியும் விஜிதா, வினோதன், வித்தியா, விந்தியா, விதுர்ஷன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

(1600)

தகவல்: குடும்பத்தினர்
077 605 4082



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரிவால் துயருறும் – நாரந்தனை வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்



நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய
சைவமகாசபையின் செயலாளரும், மூத்த உறுப்பினரும் திரு.சு.இராமலிங்கம்
அவர்களின் அன்புத் துணைவியார்

அமரர்

## திருமதி யோகாம்பிகை இராமலிங்கம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளை
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவின் துயரில்:
சைவமகா சபையினர்

தோற்றம்
28.11.1939

மறைவு
05.12.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



நாரந்தனை மக்கள் சங்க உறுப்பினரும் சமய சமூகத் தொண்டருமாகிய
சுந்தரம்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவி

அமரர்

# இராமலிங்கம் யோகாம்பிகை

**தோற்றம்**
**28.11.1939**

**மறைவு**
**05.12.2017**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்

பிரிவால் துயருறும் – நாரந்தனை மக்கள் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றென்றும் மறவா நன்றி

''நன்றி மறப்பது நன்றன்று - நன்றல்லது
அன்றே மறப்பது நன்று''

**எங்கள் குடும்பத் தலைவியாய்**
**பெருங்குணக்குன்றாய் விளங்கிய**

## *அமரர் திருமதி யோகாம்பிகை இராமலிங்கம்*

அவர்களின் மரணச் செய்தி கேட்டு, ஓடோடி வந்து பல உதவிகள் , ஒத்தாசைகள் புரிந்த உறவினர்கள், நண்பர்களுக்கும், தினமும் பங்கு கொண்டோருக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைதொடர்பு, மின்னஞ்சல் , முகநூல் ஆகியவை மூலம் அனுதாபச் செய்தியை தெரிவித்த உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்புற நடைபெற உதவிய நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும், அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் "யோக மலரை" சிறப்புடன் அச்சிட்டுத்தந்த சாமளி அச்சகத்தாருக்கும் எமது சிரம் தாழ்த்தி என்றென்றும் மறவா நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**நாரந்தனை வடக்கு**
**ஊர்காவற்றுறை**

நன்றி மறவா
**கணவர், பிள்ளை, மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்**
**உறவினர்கள்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னியதேர் (




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர் குடும்பம்

• சரவணமுத்து + • அன்னப்பிள்ளை

ளை

• பேரம்பலம் + மகேஸ்வரி
புவனேஸ்வரி
பரமேஸ்வரி
• சிவகுமார்

• இராசம்மா

• உலகநாதபிள்ளை + சறோஜினிதேவி
உதயகுமாரன்
விஜயகுமாரன்
வசந்தகுமாரன்

சரஸ்வதியம்மா + • தர்மலிங்கம்
உலகாம்பிகை
கணேஸ்வரன்

• திலகவதியம்மா + • கந்தசாமி
நந்தாவதி

• விமலாதேவி + • சண்முகநாதன்
பவானி
• பகீரதநாதன்
ஸ்ரீரங்கநாதன்

தன்
நபவதி
தன்
ன்
ஷா

உருத்திரமூர்த்தி + தனலட்சுமி
கல்பானா
ரமணன்
• ஆதவன்
தக்ஷனா

தற்பராதேவி + • சிவஞானலிங்கம்
அபர்ணா
அருணன்

யோகநாதன் + பிறேமகுமாரி
பிரியதர்சன்
சுயானா

லோகேஸ்வரி + வைரவநாதன்
அபிஷேக்
வைரகா

மகேஸ்வரி + • இன்பலிங்கம்
விஜிதா + கண்ணதாசன்
வினோதன் + வக்சலா
வித்தியா + வரன்
விந்தியா + • சுதர்சன்
விதுர்ஷன் + நிரோஜினி

கதிரவேலு + செல்லம்மா

ள

மகேந்திரன் + தம்பிஜயா

சிதம்பரப்பிள்ளை + புனிதவதி

மரகதம் + குணரத்தினம்

செல்வராசா + சாந்தாதேவி

சுரேஸ்

மஞ்சு

மானஷா

சஜீவ் + வான்மதி
கரீஸ்
சயிஜனா

மிதுர்ஷா
மிதுசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு பானாவிடை பரிவதபத்தினி
சிவன் தேவஸ்தானம்



மனித நெற்றிப் பொட்டில் ஒளிரும்
அர்த்த நாரிய மனோன்மணி அம்பாள்
சமேத சதாசிவன்



புங்குடுதீவு பானாவிடை சிவன் தேவஸ்தான
சித்திரத் தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] - கொக்குவில்.